மலர்-2 இதழ்-30 நவம்பர் 16-30 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



நானும் ஒரு வட்டிக்கடைக்காரன் ஆகியிருப்பேன்!

-காஞ்சி பெரியவர்

பஞ்ச பூதங்களுக்குரிய மூலிகைகள்

இறைவனுடன் நீங்கள் பேசுவது எப்படி?

## ஐயப்பனுக்குரிய ஆறுபடைவீடு

# பித்ருதோஷம் நீக்கும் செவ்வாய் பிரதோஷம்

சிவபெருமான் ஆலகால விஷத்தை அருந்தி நீலகண்டனானது இந்தப் பிரதோஷ நேரத்தில் தான். தேவர்களும், அசுரர்களும் போட்டி போட்டுக் கொண்டு பாற்கடலைக் கடைந்தபோது திருமகள், ஐராவதம், காமதேனு, கற்பகத்தரு, சிந்தாமணி, கௌஸ்துப மணி முதலியவை ஒவ்வொன்றாகத் தோன்றின. லட்சுமியைத் திருமால் ஏற்றுக் கொண்டார்.

மற்ற பொருட்களை இந்திராதி தேவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் கூடவே கொடிய ஆலகால விஷமும் வெளிப்பட்டது. இதைக்கண்டு தேவர்களும், முனிவர்களும் பெரிதும் நடுங்கினர். உயிர்களைக் காப்பாற்ற பரமசிவன் அந்த ஆலகால விஷத்தை உண்டார். தன் கணவரின் உடலில் விஷம் பரவுவதைக்கண்ட பார்வதி தேவி தன் தளிர்க்கரங்களால் அவரைத் தொட விஷம் சிவனின் நெஞ்சுக் குழியிலேயே நின்றுவிட்டதால் இறைவன் நீலகண்டனானார். இந்த நேரம் தான் பிரதோஷ காலம் என்று வணங்கப்படுகிறது.



ஒவ்வொரு மாதமும் அமாவசைக்குப் பின், பௌர்ணமிக்குப் பின் என்று இரண்டு பிரதோஷ நாட்களிலும் சிவாலயங்களில் குறித்த நேரத்தில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. சிவனுக்குப் பால், தேன், தயிர், சந்தனம், பன்னீர், திருநீறு மற்றும் பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் செய்து வில்வம், அரளி, தாமரை, மல்லிகை மலர்களால் அர்ச்சனை செய்த பின் தீபாராதனை நடைபெறும்.

இறைவனுடன் கூடவே அவருடைய வாகனமான நந்தி தேவருக்கும் அபிஷேகம் நடைபெறும். இவருக்கு எண்ணெய், பால், தயிர், சந்தனம், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்காகத் தரலாம். பின் அருகம் புல், பூ சாற்றிய பின் வில்வத்தால் அர்ச்சனை செய்வது வழக்கம்.

நந்தி தேவரது தீபாராதனைக்குப் பின் மூலவரான லிங்கத்திற்கு நடக்கும் தீபாராதனையை நந்தியின் இரண்டு கொம்புகளுக்கிடையே பார்த்து தரிசிக்க நம் தோஷங்கள் நீங்கி நன்மையுண்டாகும்.

எல்லா பிரதோஷங்களையும் விட சனிக்கிழமை வரும் பிரதோஷம் "சனிப் பிரதோஷம்" என்று சிறப்பாகக் கூறப்படுகிறது. அதுவே கிருஷ்ணபட்சத்தில் (தேய் பிறை) சனிக்கிழமையில் வந்தால் "மஹாப் பிரதோஷம்" என்று வழங்கப்படுகிரது. சாதாரண பிரதோஷ வேளைகளில் சிவாலயம் சென்று வழிபட்டால் ஒரு வருடம் ஆலயம் சென்று இறைவழிபாடு செய்த பலனும், சனிப் பிரதோஷத்தன்று அவ்வாறு வழிபடும் போது ஐந்து வருடம் ஆலய வழிபாடு செய்த பலனும் கிடைக்கும்.

**செவ்வாய் திசை நடப்பவர்கள், செவ்வாயை லக்னாதிபதியாக கொண்டவர்கள் செவ்வாய் அன்று வரும் பிரதோஷத்திற்கு அவசியம் செல்ல வேண்டும்**

பிரதோஷ காலத்தில் பார்வதியுடன் கூடிய சந்திரசேகரன் ரிஷப வாகனத்தில் ஆலயத்தை மூன்று முறை வலம் வருவதைப் பார்க்கலாம்.

முதல் சுற்றில் வேதபாராயணத்தையும், இரண்டாம் சுற்றில் திருமுறை பாராயணத்தையும், மூன்றாம் சுற்றில் நாதஸ்வர இன்னிசையையும் இசைத்தபடி, பிரதோஷ மூர்த்தியுடன் பக்தர்கள் வலம்வரவேண்டும் என்று சாஸ்திரங்களில் வரையறுக்கப்பட்டுள்ளது.



இவ்வாறு சிறப்பு வாய்ந்த பிரதோஷங்கள் வார நாட்களில் ஒவ்வொரு கிழமைகளில் வந்தால் ஒவ்வொரு கிழமைக்கும் ஒருசில கூடுதல் பலன்கள் உண்டு.

இதில் குறிப்பாக செவ்வாய்க் கிழமை வரும் பிரதோஷத்தில் கலந்து கொண்டால் ருண, ரண தோஷம் நீங்கும் என்பது சிறப்பு.

செவ்வாய் திசை நடப்பவர்கள், செவ்வாயை லக்னாதிபதியாக கொண்டவர்கள் செவ்வாய் அன்று வரும் பிரதோஷத்திற்கு அவசியம் செல்ல வேண்டும். எந்த ராசி, நக்ஷத்திரத்தை உடையவரக இருந்தாலும், செவ்வாய் கிரகத்தால் வரும் கெடு பலன் நீங்கும். பித்ரு தோஷம் நீங்கும், கடன் தொல்லை தீரும் என்பது சிறப்பு.

# நட்பு பாராட்டி வாழ்ந்து ஒரே ஊரில் சமாதியடைந்த

# வியாக் கிரபாதர் பதஞ்சலி முனிவர்



வியாக்கிரபாதர் எனும் புலிகால் முனிவர் மத்யந்தனர் என்பவரின் மகனும், சிறந்த சிவ பக்தனும் ஆவார். இவருடைய இயற்பெயர் மழன் என்பதாகும். கடும் தவத் தால் புலிக்காலும் புலியின் பார்வையையும் பெற்றதால் இவர் வியாக்கிரபாதர் என்றும் அழைக்கப்படுகிறார்

சிவபெருமானுக்கு தூய மலர்களால் அர்ச்சனை செய்ய விரும்பிய மழன், மரத்திலிருந்து கீழே விழும் மலர்களையும், வண்டு போன்ற உயிரினங்களால் நுகரப்பட்ட மலர்கள் என்பதால் அதிகாலையிலேயே மரத்தில் ஏறி அர்சனைப் பூக்களை சேகரிக்க விரும்பினார்.

இரவு நேரத்தில் கண்களுக்கு போதிய வெளிச்சம் இல்லாமையாலும், மரத்தில் ஏறுவதற்கு வசதியான உடலமைப்பு இல்லாமையாலும் மிகுந்த கவலையுற்றார். அதனை தீர்க்க சிவபெருமானை நோக்கி தவமிருந்து இரவில் தெரியும் பார்வையும், புலிக்கால் மற்றும் புலி நகங்களையும் பெற்றார்.

சமஸ்கிருதத்தில் வியாக்ரம் என்பது புலியைக் குறிப்பதனால் வியாக்ரபாதர் என்று அழைக்கப்பட்டார். இதற்கு புலிக்கால்களை உடையவர் என்று பொருளாகும். தமிழில் புலிக்கால் முனிவர் என்றும் அறியப்படுகிறார்.

பதஞ்சலி முனிவரின் ஒரு பாடசாலை நண்பர் தான் புலிகால் முனிவர் என அழைக்கப்படும் வியாகரபாதர் ஆவார். பதஞ்சலி முனிவர் ஆக்கிய யோக சூத்திரத்தை வடமொழியில் எழுதியவர் வியாகரபாதர் ஆவார். திருச்சியிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது திருப்பட்டூர் பிரம்ம புரீஸ்வரர் திருக்கோயில். பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதரும் இத்தலத்தில் தங்கித் தவம் செய்து வழிபட்டிருக்கிறார்கள் என்பதற்கான கல்வெட்டு இங்குள்ளது,.

## வியாகரபாதரின் புலிபாச்சிக் குளம்

இந்திரன் கயிலாயத்திலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து திருவானைக்கா ஜம்பு கேசுவரரை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். ஒருநாள் திருப்பட்டூர் வியாகரபாதரின் சமாதி அமைந்துள்ள காசி விசுவநாதர் ஆலயத்தில் வழிபடும் புலிகால் முனிவர் இந்திரனை தடுத்து நிறுத்தி தீர்த்தம் கேட்கப்பட்டபோது, இந்திரன் தரமறுத்துவிட்டான்.

வியாக்கிரபாதர் கடும் சினமடைந்து உடனே `புலிபாச்சிக் குளம்‘ என்ற குளத்தை உருவாக்கினார். அதன் தீர்த்தம் கொண்டு காசி விசுவநாதரை வழிபாடு செய்தார்! வியாக்கிரபாதர் உருவாக்கிய புலிபாச்சிக் குளத்தில் இன்றும் எப்படிப்பட்ட கோடைகாலத்திலும் நீர் வற்றுவதே இல்லை என்பது அதிசயமாக உள்ளது.

## முனிவர்களுக்காக நடனம்

பொன்னம்பலம் அல்லது கனக சபை எனப் பெயர் கொண்ட கோவில் சிதம்பரத்திலுள்ள நடராசர் கோவில் ஆகும். இக்கோவில் பஞ்சபூதத் தலங்களில் ஆகாய தலமாகும். பெரும்பாலான சிவத்தலங்களில் சிவன் லிங்க வடிவில் அமைந்திருக்க, இக்கோவிலில் நடனத்தின் தலைவனாக நடராசர் வடிவில் உள்ளார். இங்குள்ள நடராசரின் நடனக்கோலம் ஆனந்த தாண்டவமாகும். இங்கு நடராசர் பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரபாதர் முனிவருக்கும் தனது பிரபஞ்ச நடனத்தை தைப்பூசத் திருநாளில் ஆடிக்காட்டியதாக வரலாறு சொல்கிறது .

முற்காலத்தில் பெரம்பலூர், பெரும் வனப்பகுதியாக இருந்துள்ளது. புலிகளும், சிறுத்தைகளும், கரடிகளும் வாழ்ந்த அழகிய மலைகளும், மலை சூழ்ந்த பகுதிகளும் நிறைந்த இடமாகும்.

ஸ்ரீ வியாக்ரதபாத முனிவர் பெரும்புலியூரிலிருந்த புலியங்குளத்தில் (தற்போது பெரம்பலூர் அருகேயுள்ள தெப்பகுளம்) தவம் இருந்ததாகவும், அருகில் உள்ள ஸ்ரீ மதனகோபால சுவாமி கோவிலில் இறை வழிவாடு செய்ததாகவும் சொல்லப்படுகிறது. பஞ்சபாண்டவர்கள் தங்களுடைய அஞ்ஞாத வாச காலத்தில் அருகிலுள்ள லாடபுரம் (விராடபுரம்) கிராமத்தில் அடர்ந்த வனப்பகுதியில் உள்ள மலையில் வசித்தனர். அதற்கான அடையாளங்கள் இன்றும் அங்கே உள்ளன.

அவர்கள் ஸ்ரீ மதனகோபால சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் வந்து இறைவனை வழிபட்டனர். கோவிலில் அவர்கள் நட்டு வைத்த நந்தியாவட்டை செடி பல்லாயிரக்கணக்கான வருடங்களாக இன்றும் பசுமையாக உள்ளது அதிசயம் தான்.

மேலும் அந்தச் செடி கண் நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது.

பஞ்ச பாணடவர்கள் பெரம்பலூர் ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் ஆலயத்தில் தங்களுடைய குலதெய்வமான ஸ்ரீ காசி விஸ்வநாதர் விக்ரகத்தை அவர்களே பிரதிஷ்டை செய்து வழிபட்டதாகவும் வரலாறு உண்டு.

பெரம்பலூர் வியாக்கிரபாதர் எனும் புலிகால் முனிவர் வலம் வந்த பகுதி என்பதால் தான் அங்குள்ள பல ஊர்களின் பெயர்கள் மேலபுலியூர், கிழப்புலியூர், குறும்புலியூர், புலிவலம் என்று புலியின் பெயரை தாங்கிய வண்ணம் உள்ளது.

## ஒரே ஊரில் இரண்டு சித்தர்கள் சமாதிகள்

திருபட்டூரின் இன்னொரு சிறப்பு வியாக்கிரபாதர் எனும் புலிகால் முனிவர் மற்றும் பதஞ்சலி முனிவர் என இரு சித்தர்களின் ஜீவ சமாதிகள் உள்ளது. பதஞ்சலி முனிவரின் ஜீவ சமாதி பிரம்மபுரீஸ்வரர் கோவிலின் உள்ளே பிரம்மன் சன்னதி அருகே உள்ளது. வியாகரபாதரின் சமாதி பிரம்மபுரீஸ்வரர் கோவிலுக்கு அருகில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்தில் உள்ளது.

– புருஷோத்தமன், பெரம்பலூர்




ஆன்மிகமலர் மெயில் புக்

# மூன்று வகையான மனிதர்கள்

மனிதர்கள் முன்று வகை உண்டு என்று கிருபானந்த வாரியார் கூறியுள்ளார்.

1. கஜ கர்ணம் 2. அஜ கர்ணம் 3. கோ கர்ணம் விளக்கமாக அவர் கூறியதிலிருந்து...

### 1. கஜகர்ணம்

யானை தனது நான்கு கால்களையும் சரியாக ஊன்றி நிற்காது !!

அதுபோல சில மனிதர்கள் ஒரே விஷயத்தில் தங்கள் கருத்தைச் செலுத்தாமல், பல விஷயங்களில் ஈடுபட்டுக் குழம்புவார்கள்...

அவர்களை கஜகர்ணம் போடுபவர்கள் என்று அழைக்கிறோம்..

### 2. அஜகர்ணம்

ஆட்டின் வாலைப் பிடித்து இழுத்தால் அது தன் தலையைத் தொங்கப்போடும் !!!

அதுபோல மனிதர்களில் சிலர் தங்கள் குறையை யாராவது சுட்டிக்காட்டினால் அவர்களை வெறுப்பார்கள்.... திரும்பிப் பார்க்க மாட்டார்கள்...

அவர்களை அஜகர்ணம் போடுபவர்கள் என்று அழைக்கிறோம்...

### 3. கோகர்ணம்

பசு மாட்டின் உடலில் எந்த இடத்தில் விரலால் தொட்டாலும், அந்த இடம் உணர்ச்சி வசப்பட்டு சிலிர்க்கும்!!!

அதுபோல அறிவாளிகள் எந்தச் சிறு குறையைச் சுட்டிக் காட்டினாலும் புரிந்துகொண்டு மன்னிப்புக் கேட்டுத் திருந்துவார்கள்...

இவர்களை கோகர்ணம் போடுபவர்கள் என்று அழைக்கிறோம்...



## ஸ்நானம், ஹோமம், சாப்பிடும் நேரம்
## இந்த நேரத்தில் பேசக்கூடாது என்பதற்கான காரணம்



ஸ்நானம் செய்யும்போது பேசுகிறவனது சக்தியை, வருணன் அபகரிக்கிறார்.

ஹோம காலத்தில் பேசுகிறவனது சம்பத்தை (செல்வத்தை) அக்கினி பகவான் அபகரிக்கிறார்.

போஜன காலத்தில் பேசுகிறவனது ஆயுளை எமன் அபகரிக்கிறார்.

ஆகையால், குறிப்பாக இந்த மூன்று வேளைகளிலும் மௌனம் சாதிப்பவன் பல நன்மைகள் பெறுகிறான்.

– தர்மசாஸ்திரம்






## வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில் இந்து சமயக் கருத்துக்களையும், பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

# ஆன்மிகமலர் டிரஸ்ட்

**Tamilnadu Government Redg.304/2016**

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 310601011001269**
**IFSC CODE:VIJB0003106**
**MICR CODE: 600029043**
**VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும்

**7299992699 / 8825844033**



# தர்ப்பையின் மகத்துவம்



ஆன்மிக விஷயங்கள் அனைத்திற்கும் தர்ப்பை புல் மிக அவசியமானதாக விளங்குகிறது. யாகம் வளர்க்கும்போதும், திதி, கிரகப்பிரவேஷம் போன்ற பல்வேறு ஆன்மிக செயல்களுக்கும் பயன்பட்டாலும், ஆன்மிகத்திற்கு சம்பந்தமில்லாத மனித உடல் நோய்கள் பலவற்றிற்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

தர்ப்பைப் புல்லை நாட்டு மருந்து கடைகளிலும், கிரகணத்தின்போது கோயில்களிலும் பார்த்திருப்போம். இதன் மகத்துவம் ஏராளமானது. தர்ப்பைப் புல் வளர தண்ணீர் தேவையில்லை. தண்ணீர் இல்லாமலும் வளரும் இது, பல நாட்களுக்கு தண்ணீரிலேயே போட்டு வைத்தாலும் அழுகாத தன்மை கொண்டது. சூரிய கிரகணத்தின் போது இதற்கு வலிமை அதிகம்.

இதன் காற்றுப்படும் இடங்களில் தொற்று நோய்கள் அண்டாது. அதனால்தான் கிரகண காலத்தில் இந்த தர்ப்பைப் புல்லை நாம் பயன் படுத்தும் உணவுப் பொருட்கள், மளிகைப் பொருட்கள், குடிநீர்களில் போட்டு வைக்கின்றோம். இந்த புல்லில் காரமும், புளிப்பும் இருப்பதால் செப்பு ஐம்பொன் உலோக படிமங்களை இந்த புல்லின் சாம்பலில் தேய்க்கிறார்கள். அவ்வாறு செய்வதால் அதன் ஓசை திறன் குறையாமல் இருக்குமாம்.

தர்ப்பைப்புல் சுவையில் இனிப்பு மற்றும் துவர்ப்புச் சுவையுடையது. குளிர்ச்சியான வீரிய முடையது. சீரணத்தின் இறுதியில் இனிப்புச் சுவையாக நிற்கக் கூடியது.

மூவகை தோஷங்களாகிய வாத பித்த கபங்களை அவற்றின் சீற்றத்திலிருந்து கீழிறக்கி சமநிலைப் படுத்துவதனால் தர்ப்பை ஒரு அருமருந்தாக நாம் குறிப்பிடலாம். சில சர்க்கரை உபாதை நோயாளிகளுக்கு உடலில் எரிச்சலுடன் மஞ்சள் நிறம் கலந்த சிறுநீர் காணப்படும். இதற்கு ஹாரித்ரமேஹம் என்று ஆயுர்வேதம் கூறுகிறது. மேலும் சிலருக்கு துர்நாற்றமுள்ளதாகவும், மஞ்சிட்டை (மஞ்சள்நிறம்) கலக்கிய நீர் போன்றதுமாக சிறுநீர் வெளியேறும் நிலையில் அதற்கு மாஞ்சிஷ்டமேஹம் என்றும் துர்நாற்றம், சூடு, இரத்தம் போன்றும் சிறுநீர் வெளியேறுவதும் இரக்த மேஹமென்றும் கூறப்படுகிறது.

இந்த மூன்று வகையான சிறுநீர் உபாதைகள் அனைத்தும் பித்ததோஷத்தினுடைய சீற்றத்தின் விளைவாக ஏற்படுவதால் அதுபோன்ற நிலைகளில் தர்ப்பைக் குடிநீர் அருந்துவது பித்தத்தினால் ஏற்படக் கூடிய சர்க்கரை உபாதையை குறைப்பதுடன் சிறுநீரகம் மற்றும் சிறுநீர் பாதையில் ஏற்படும் தொற்று உபாதைகளையும் குணப்படுத்தும் சக்திவாய்ந்த ஒரு குடிநீர் ஆகும்.

சுமார் 15 கிராம் தர்ப்பைப்புல்லை ஒரு லிட்டர் தண்ணீரில் கொதிக்கவிட்டு அரை லிட்டர் ஆகும்வரை குறுக்கிக் காய்ச்சி குளிர்ந்தபிறகு வடிகட்டி அந்த தண்ணீரை ஒரு நாளில் பலதடவை சிறிது சிறிதாகப் பருகிவர மேற்குறிப்பிட்ட உபாதைகள் நீங்கிவிடும். சிலருக்கு தர்ப்பை நீரைக் காய்ச்சுவதற்கான நேரம் இல்லாமல் இருப்பதால் தர்ப்பைப் புல்லை நன்றாக இடித்து இரவு முழுவதும் பானைத் தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் காலையில் அதைப் பருகுவதன் மூலம் அந்த நீருக்கான மருத்துவகுணங்களை நம்மால் பெற இயலும். இதற்கு "ஹிமகஷாயம்" என்று ஆயுர்வேதம் பெயரிட்டுள்ளது.

சர்க்கரை உபாதையின் தாக்கத்தையும் நாம் குறைத்துக்கொள்ள முடியும். தர்ப்பைப்புல்லுக்கு மேலும் சில நல்ல மருத்துவகுணங்கள் இருக்கின்றன.



தர்ப்பைப்புல் உடலுக்குக் குளுமையை ஏற்படுத்துவதால் தர்ப்பைப்புல் குடிநீர் வெயில் காலத்தில் அருந்தவேண்டிய ஒரு அற்புதமான பானமாகும்.

தர்ப்பையிலுள்ள நெய்ப்பு, இனிப்பு மற்றும் குளிர்ச்சியின் காரணமாக தாய்ப்பாலையும், சிறுநீரையும் அதிகளவில் சுரக்கச் செய்கிறது.

சிறுநீரகத்தில் ஏற்படும் இரத்த அழுத்தத்தை சீராக்கக் கூடிய தர்ப்பைக் குடிநீரின் உபயோகத்தின் மூலம் இரத்தத்தில் தேங்கும் யூரியா, க்ரியாட்டினின் கழிவுப் பொருட்களை அகற்றகிறது.

சிறுநீரகக் கற்களை உடைத்து வெளியேற்றும் தன்மை தர்ப்பைப்புல்லுக்கு இருக்கிறது.

தண்ணீர் தாகத்தைப் போக்கும். சிறுநீரகப்பையில் ஏற்படும் வலி மற்றும் அதிகமான மாதவிடாய் இரத்தப்போக்குள்ள பெண்களுக்கும் தர்ப்பைக் குடிநீர் மிகவும் நல்லது என்று பாவப்ரகாசர் எனும் ஆயுர்வேதமுனிவர் குறிப்பிடுகிறார். மஞ்சள் காமாலை உபாதையில் கல்லீரலில் உள்ள கிருமித்தொற்று மற்றும் அதிகமான பித்தஊறல் ஆகியவற்றைக் குறைக்கக் கூடியது. இரத்தத்தில் ஏற்படும் காந்தல் மற்றும் அதன்மூலமாக ஏற்படும் இரத்தமூலம், இரத்தக்கசிவு, வாய்ப்புண் சிறுநீரக எரிச்சல் போன்றவற்றை குணப் படுத்தும்.

நாவிற்கு நல்ல ருசியை ஏற்படுத்தித் தரும். Herpes zoster எனப்படும் நரம்பு தொடர்தோல் எழுச்சியில் தர்ப்பைப் புல் தண்ணீரை வெளிப்புறம் மற்றும் உட்புற உபயோகத்தால் அதில் ஏற்படும் எரிச்சல் மற்றும் குத்தல் வலியை நம்மால் போக்கிக் கொள்ள முடியும் என்று நிகண்டுரத்னாகரம் மற்றும் ராஜநிகண்டு எனும் ஆயுர்வேத புத்தகங்களில் குறிப்புகளாகக் காணப்படுகின்றன.

காஞ்சி மஹாஸ்வாமிகள் தர்ப்பையின் பெருமைகளைப் பற்றி, "தர்ப்பை, துளஸி, வில்வம் என்றிப் படி நம் சாஸ்திர காரியம், பூஜை இவற்றில் பிரயோஜனமாகின்றவற்றுக்கெல்லாம் வைத்ய ரீதியிலோ, மற்ற ஸயன்ஸ்களின் ரீதியிலோ sound basis (அழுத்தமான அடிப்படை) இருக்கிறது என்கிறார்கள்.

க்ரஹண காலத்தில் எல்லாவற்றிலும் தர்ப்பையைப் போட்டு வைக்க வேண்டுமென்றால் முன்னே பரிஹாஸம் செய்தார்கள். "சூரியனைப் பாம்பு தின்கிறதாம். அதன் நாக்கை அறுப்பதற்கு தர்ப்பை போட்டிருக்கிறார்களாம்!" என்று கேலி பண்ணினார்கள். ஆனால் இப்போதோ க்ரஹண காலத்தில் அட்மாஸ்ஃபியரிலும், அதற்கும் மேலே இருக்கிற ஸ்ஃபியர்களிலும் அநேக contamination (அசுத்தம்), radiation ஆகியன உண்டாவதாகவும், கர்ப்பத்திலிருக்கிற சிசுவைக் கூட அது பாதிப்பதாகவும், அதனால் "க்ரஹணத் தீட்டு" என்று அந்த் காலத்தில் சாப்பிடாமல் இருக் கணும் என்று வைத்ததில் ரொம்ப அர்த்தமிருப்பதாகவும், இந்தபாதிப்பை counteract பண்ணும் (எதிர்த்துப் போக்கும்) சக்தி தர்ப்பைக்கு இருக்கிற தென்றும் கூறுகிறார்கள்.

இத்தனை சிறப்பு வாய்ந்த தர்ப்பை நீரை பயன்படுத்தி அதன் நிறைவான பலனை அனைவரும் பெற முயற்சிப்பது ஆரோக்கியத்திற்கான ஒரு திறவுகோலாக அமைத்துக் கொள்வோம்.



# இறைவனுடன் நீங்கள் பேசுவது எப்படி?

மனிதர்களுக்குள்ளே ஒற்றுமை என்பது இல்லாமலிருக்கும் காலம் இது. ஒற்றுமையிருந்தால்தானே வேற்றுமை நுழையாது. மனிதர் தங்களின் மகிழ்ச்சியை பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதைக்கூட விரும்பாத காலகட்டம் இது. தங்கள் குடும்பத்தில் ஏதாவது நன்மை அல்லது மகிழ்ச்சியான விஷயம் நடக்கவிருந்தால் அதை பிறரிடத்தில் கூறி அந்த சந்தோஷத்தைப் பங்கிட்டுக்கொள்வது சிறப்பு.

ஆனால் அவ்வாறு யாரும் செய்வதில்லை. ஏனெனில், நடக்கவிருக்கும் விஷயத்தை பிறரிடம் கூறினால் அதன்பின்னர் அதுபோன்ற நல்ல விஷயம் நடக்காது என்று பலரும் நம்புகிறார்கள். இவ்வாறிருக்கையில், மனிதர் தங்களுக்குள்ளேயே பரஸ்பரம் பேசாமலும் மகிழ்ச்சியில் பங்குகொள்ளாமலும்இருக்கும்பொழுது, “இறைவனுடன் எவ்வாறு பேசுவது? இறைவன் எங்கேயோ இருக்கிறார்; நாமெல்லாம் எங்கேயோ இருக்கிறோம். அப்படியென்றால் இறைவனுடன் பேசுவதென்பது நடக்கிற விஷயமா?” என்று எண்ணுகின்ற மனிதர்கள் ஏராளம். “இறைவன் தமக்குள்ளேதான் இருக்கிறான்; நாம் ஒவ்வொருவரும் அவனுடன் பேசலாம்.” என்ற மனநோக்குடையவர்கள் இன்றைக்கு மிகக் குறைவே. இறைவனிடத்தில் விசுவாசம் வைத்துக்கொள்ளும் மனிதர்களின் எண்ணங்கள் நிச்சயமாக நிறைவேறும். அப்படிப்பட்ட எண்ணங்களை வளர்த்துக்கொள்வதற்கும் மாறான எண்ணங்களை களைவதற்கும்தான் குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் இறைவனுடன் நீங்கள் பேசமுடியும் என்பதுபோன்ற ஆணித்தரமான போதனைகளை அருளியிருக்கிறார்.

பரமஹம்ஸர் கூறுகிறார்: “இந்தியாவில் மகான்கள் இறைவனுடன் பேசிக்கொண்டிருந்தபொழுதுதான் அவர்கள் முன்னிலையில் இருந்திருக்கிறேன். மேலும் நீங்கள் அனைவரும்கூட இறைவனுடன் தொடர்பு கொள்ள முடியும். அதாவது நீங்கள் ஒருபட்சமாகப் பேசுவது அல்ல, ஆனால் நீங்கள் உண்மையாகவே இறைவனுடன் பேசலாம். இறைவன் மறுமொழி கூறுவதையும் கேட்கலாம். ஒவ்வொருவரும் பரம்பொருளுடன் நிச்சயமாகப் பேசமுடியும். ஆனால் இன்று நமக்கு பதிலளிப்பதற்கு இறைவனை எவ்வாறு இணங்கவைக்கலாம் என்று நான் பேசப்போகிறேன். அவற்றுள் மிக அழகாக உள்ள ஒரு நிகழ்வானது, இறைவன் ஒருவருக்கு இராத்திரியில் சொப்பனத்தில் தரிசனமாகி, “நீ விரும்புவதை என்னிடத்தில் கேள்” என்று சொன்னார். அவர் ”அடியேனுக்கு ஞானமுள்ள இதயத்தை தந்தருள வேண்டும்” என்று பதில் கூறினார். இறைவன் அவனை நோக்கி ”நீ உனக்கு நீடித்த நாட்களை கேளாமலும், ஐஸ்வரியத்தைக் கேளாமலும், உன் சத்ருக்களின் பிராணனைக் கேளாமலும் நீ இந்த காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிப்பதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியால் உன் வார்த்தைகளின்படி ஞானமும் உணர்வுமுள்ள இதயத்தை உனக்குத் தந்தேன். நீ கேளாத ஐஸ்வரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன்” என்று இறைவன் அவனை நோக்கி கூறினான்.

மேலும் அவர் தொடர்ந்தார்: “அன்பினால் மட்டுமே இறைவன் இளகுவான். சராசரி மனிதன் இறைவனை இதயதாபத்துடன் அல்லாமல் மனதளவில்தான் பிரார்த்திக்கிறான். இப்படிப்பட்ட பிரார்த்தனைகள் எந்த பதிலையும் பெறுவதற்கு வலிமை அற்றவை. நாம் நம்பிக்கையுடனும் நெருக்கமான உணர்வுடனும் எப்படி தாய் அல்லது தந்தையரிடம் பேசுகிறோமோ அவ்வாறே பரமாத்மாவுடன் பேசவேண்டும். இறைவனுடன் நம் உறவு எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாத அன்பாக இருக்கவேண்டும். வேறு எந்தவிதமான உறவையும்விட நாம் உரிமையுடனும் இயல்பாகவும் பரமாத்மாவிடமிருந்து அதன் தெய்வத்தாய் ரூபத்தில் பதிலைக் கோரலாம். இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்கு இறைவன் பதிலளிக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறார்; ஏனெனில் தன் குழந்தை எப்படிப்பட்ட பாவியாக இருந்தாலும் அவனிடம் அன்பும் மன்னிப்பும் காட்டுவதே ஒரு தாயின் பண்பாகும். இறைவன் நமக்கு அளித்துள்ளவற்றில் தாய்க்கும் குழந்தைக்கும் இடையே உள்ள உறவுதான் மனித அன்பின் மிகவும் அழகான வடிவமாகும்.”



மனித வாழ்வு மேம்படுவதற்காக

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

**22 பாகம்**

“இறைவனைப்பற்றிய ஒரு நிச்சயமான கருத்து இறைவன் தெய்வத்தாய் மிகவும் அவசியம். இது மிகவும் தெளிவாகவும் வலிமையாகவும் இருக்கவேண்டும்.அரைகுறை நம்பிக்கையுடன் செய்யும் பிரார்த்தனை போதுமானதல்ல. “இறைவன் என்னுடன் பேசப்போகிறான்” என்று அவன்மீது முழு நம்பிக்கையுடன் இருந்தால், ஒருநாள் அவன் நிச்சயமாக மறுமொழி கூறுவான்.”

இறைவனிடத்தில் அநேக சந்தர்ப்பங்களில், அவனுடன் பேசியுள்ளவற்றில் சிலவற்றைப்பற்றி குருதேவர் தொடர்ந்து கூறுகிறார்: “நான் சிறு குழந்தையாக இருந்தபொழுது இறைவனின் குரலைக் கேட்கும் “முதல் அனுபவம்” ஏற்பட்டது. ஓர் அதிகாலையில் நான் என் படுக்கையில் உட்கார்ந்திருந்தபொழுது, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டேன். “மூடிய கண்களின் இருளுக்குப் பின்னால் என்ன இருக்கிறது?” இந்த ஆராயும் எண்ணம் மனதில் மிகத்தீவிரமாகத் தோன்றியது. என்னுடைய அகப்பார்வையில் உடனே மிகப்பெரிய ஒளிக்கதிர் வெளிப்பட்டது. என்னுடைய நெற்றிக்குள் ஒளிர்ந்த பெரிய ஒளித்திரையில் மலைக்குகைகளில் தியானத்தில் அமர்ந்திருக்கும் மகான்களின் தெய்வீக உருவங்கள் சிறு சினிமா படங்களைப் போலத் தோன்றின.

“யார் நீங்கள்?” என்று நான் உரக்கக் கேட்டேன். “நாங்கள் இமாலயத்தில் உள்ள யோகிகள்” என்று பதில் வந்தது. அதைக் கேட்டு என் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. அத்தோற்றம் மறைந்தது, இருப்பினும் அவ்வெள்ளிக்கிரணங்கள் என்றும் விரிந்த வளையங்களாகி எல்லையில்லாமல் பரந்தன.

“இந்த அதிசய ஒளி யாது? என்று நான் கேட்டேன். “நான் ஈஸ்வரன் (இறைவன்), நான் ஒளி” என்ற அக்குரல் மேகங்களின் முழக்கம்போல் இருந்தது. மேலும் அவர் கூறுகிறார்: “எனக்கு இந்த அனுபவம் ஏற்பட்டபொழுது என் தாயாரும் என் மூத்த சகோதரியும் அருகில் இருந்தனர். அவர்களும் இந்த தெய்வீகக் குரலை கேட்டனர். இறைவனுடைய மறுமொழியை கேட்டு அடைந்த ஆனந்த பரவசத்தில் நான் இறைவனுடன் ஒன்றாகக் கலக்கும்வரை அவனைத் தேடவேண்டும் என அங்கேயே அப்பொழுதே தீர்மானித்தேன்.

அவர் தொடர்ந்தார்: “நீங்கள் ஒரே ஒருமுறை இறைவனுடன் தொடர்புகொண்டுவிட்டால், அவன் அடிக்கடி உங்களுடன் பேசுவான். ஆனால் ஆரம்பத்தில் இது மிகவும் கடினம்; இறைவனுடன் பரிச்சயம் செய்துகொள்வது சுலபமல்ல, ஏனெனில் அவனை அறிந்துகொள்ள உண்மையிலேயே விருப்பம் உண்டா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள அவன் விரும்புகிறான். பக்தன் தன்னை விரும்புகிறானா என்பதை அறிய அவன் சோதனை கொடுக்கிறான். உங்களுடைய இதயத்தில் வேறு எந்தவிதமான ஆசையும் மறைந்திருக்கவில்லை என்று அவனை நீங்கள் நம்பவைக்கும் வரை அவன் உங்களுடன் பேசமாட்டான். அவனுடைய பரிசுகளுக்கான ஏக்கங்களால் மட்டுமே உங்கள் இதயம் நிறைந்திருந்தால், அவன் ஏன் உங்களுக்கு தரிசனம் கொடுக்கவேண்டும்?”

மனிதனுடைய அன்புதான் அவன் இறைவனுக்கு அளிக்கும் ஒரே பரிசு

பரமஹம்ஸர் கூறுகிறார்: “மனிதனை சோதிப்பதற்காகவே முழு படைப்பும் திட்டமிடப்பட்டுள்ளது. உலகில் நம்முடைய நடத்தையின் மூலம் இறைவனை விரும்புகிறோமா என்பதை நாம் வெளிப்படுத்துகிறோம். எல்லாவற்றையும்விட இறைவனைத்தான் விரும்பவேண்டும் என்று அவன் உங்களிடம் கூறமாட்டான். ஏனெனில் எந்தவிதமான ‘தூண்டலும்’ இன்றி உங்களுடைய அன்பு நிபந்தனையின்றி கொடுக்கப்படவேண்டும் என்று அவன் விரும்புகிறான். இந்தப் பிரபஞ்ச லீலையின் முழு இரகசியமும் இதுதான். நம்மைப்

படைத்தவன் நம் அன்பிற்காக ஏங்குகிறான். அவன் கேட்காமலேயே நாமாகவே முன்வந்து அதை அளிக்கவேண்டும் என்று அவன் விரும்புகிறான். இறைவனிடம் இல்லாத ஒரே பொருள் நமது அன்புதான். நாமே அந்த அன்பை அவனுக்கு விரும்பி அளிக்காவிடில், அவன் அதைப் பெறமாட்டான். எனவே இறைவன் கூட ஏதோ ஒன்றை அடைய வேண்டியுள்ளது; அதுதான் நமது அன்பு. மேலும் நாமும் அதை இறைவனுக்கு வழங்கும் வரை மகிழ்ச்சி அடையமாட்டோம். இந்த உலகப் பந்தில் ஊர்ந்து செல்லும் சிறு மனிதர்களாக, இறைவனது பரிசுப்பொருட்களுக்காக மட்டுமே அழுதுகொண்டு, பரிசளிப்பவனை மறந்துவிட்ட வழிதடுமாறிய குழந்தைகளாக இருக்கும்வரை நாம் அங்கே துன்பக்குழிகளில் விழுகிறோம். இறைவன் நம்முடைய இருப்பின் சாரமாக இருப்பதால், நம்முள் அவனுடைய இருப்பை உணர்ந்து அறியும்வரை நமது சுயரூபத்தை உண்மையாக வெளிப்படுத்த இயலாது. இதுதான் உண்மை. நாம் தெய்வத்தன்மை பொருந்தியவர்களாக அவனுடைய ஓர் அங்கமாக இருப்பதனால் லௌகீக விஷயங்களில் நாம் நிரந்தரமான திருப்தியைக் காணமுடிவதில்லை. "இறைவனுக்கு அடைக்கலம் அளிக்காதவனுக்கு எதுவும் அவனுக்கு அடைக்கலம் அளிக்காது. நீங்கள் இறைவனில் திருப்தி அடையும்வரை வேறு எதிலிருந்தும் நீங்கள் திருப்தியைக் காணமுடியாது."

பரமஹம்ஸர் கூறுகிறார்: "இறைவன் உங்களுக்கு மறுமொழி கூறுகின்றவன்; நீங்கள் அவனுள் இசைந்திருந்தால், அவன் உங்களை தாங்கிப்பேணி, எல்லாவற்றிலும்உங்களுடைய நண்பர்களை அல்லது தொழில் கூட்டாளிகளை தேர்ந்தெடுப்பதிலோ அல்லது தினசரி முடிவுகளிலோஉங்களுக்கு வழிகாட்டுவான்"

அதற்கான ஒரு கதையை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

## கடவுள் நம்பிக்கை

குளிர்காலம். மாலை நேரம். ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. ஒரு வேப்பமரத்தில் ஆங்காங்கே காகங்கள் நிறைய உட்கார்ந் திருந்தன. அவை அடிக்கடி 'காகா' என்று கரைந்து கொண்டிருந்தன. ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டிருந்தன. அச்சமயம் அங்கு ஒரு சிறிய மைனா வந்து அதே வேப்பமரத்தின் ஒரு கிளை மீது அமர்ந்தது. மைனவைப் பார்த்ததும் பல காகங்கள் அதன்மீது பாய்ந்தன. "மேகங்கள் சூழ்ந்துள்ளன. விரைவாக இருட்டு ஆரம்பித்துவிட்டது. நான் என் கூட்டை மறந்துவிட்டேன். ஆகையால், என்னை இன்று இரவு மட்டும் இங்கே தங்க அனுமதியுங்கள்" என்று அந்த அப்பாவி மைனா வேண்டியது. ஆனால் காகங்களோ, "இந்த மரம் எங்களுடையது. நீ இங்கிருந்து ஓடிவிடு. என்றன. "மரங்கள் எல்லாமே கடவுளுடையவை. இந்தக்குளிரில் மழை பிடித்துக்கொண்டு ஆலங்கட்டி விழ ஆரம்பித்தால் நம் எல்லோருடைய உயிரையும் கடவுள்தானே காப்பாற்றமுடியும்! நான் மிகச்சிறியவள். உங்கள் தங்கையாக என்னைக் கருதி, என் மீது நீங்கள் இரக்கம் காட்டுங்கள். என்னையும் இங்கே உட்காரவிடுங்கள்" என்று மைனா கெஞ்சியது. "எங்களுக்கு உன்னைப்போன்ற தங்கை தேவையில்லை. நீ கடவுள் பெயரை அடிக்கடி உச்சரிக்கிறாய். அந்தக் கடவுள்மீது நம்பிக்கை வைத்து, நீ ஏன் இங்கிருந்து சென்றுவிடக்கூடாது? நீ போகாவிட்டால் நாங்கள் உன்னைக் கொல்வோம்" என்று காகங்கள் கூறின.

காகங்களோ சண்டைக்காரப் பறவைகள். அவை மாலையில் மரத்தில் உட்கார்ந்ததுமே தங்களுக்குள் சண்டையிடாமல் இருப்பதில்லை. அவை ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு, 'காகா' என்று கரைந்து, சண்டையிட்டுக்கொண்டே இருக்கும். எந்தக் காகம் எந்தக் கிளையில் உட்கார்வது என்பதை, அவை விரைவில் தீர்மானிப்பதில்லை. ஆகவே அவற்றுக்குள் அடிக்கடி சண்டை நடந்து கொண்டே இருக்கும். பிறகு எப்படி மற்றொரு பறவையை தங்கள் மரத்தின்மீது உட்கார அனுமதிக்கும்? தங்கள் சண்டையை விட்டு, அவை மைனாவைத் தாக்க ஓடி வந்தன. காகங்கள் 'காகா' என்று கரைந்துகொண்டு தன்னை நோக்கிப் பாய்வதைப் பார்த்த அந்த அப்பாவி மைனா, அங்கிருந்து பறந்து, கொஞ்சதூரம் சென்று ஒரு மாமரக் கிளையில் உட்கார்ந்துகொண்டது. இரவில் புயல் வந்தது. இடி இடித்தது. பெரிய பெரிய உருளைக்கிழங்கு அளவுள்ள ஆலங்கட்டிகள் தடதடவென்று, துப்பாக்கியிலிருந்து குண்டுகள் விழுவது போன்று விழத் தொடங்கின. காகங்கள் 'காகா' என்று கரைந்தன.இங்கும் அங்குமாகப் பறந்தன. ஆனால் ஆலங்கட்டியின் தாக்குதலினால் எல்லாமே காயமடைந்து, தரைமேல் விழுந்தன. பல காகங்கள் இறந்துவிட்டன. மைனா உட்கார்ந்திருந்த மாமரத்தின் ஒரு பெரிய கிளை புயலில் ஒடிந்துவிட்டது. கிளையின் உட்புறம் உளுத்துப்போயிருந்ததால் கூடாகிப் போயிருந்தது. கிளை உடைந்ததும் வேருக்கு அருகில் உடைந்த இடத்தில் ஒரு பெரிய பொந்து ஏற்பட்டுவிட்டது. இந்தச் சிறிய மைனா அதற்குள் நுழைந்துகொண்டது. அதன்மீது ஓர் ஆலங்கட்டிகூட விழவில்லை.



பொழுது விடிந்து இரண்டு மணிநேரம் சென்றதும் வெளிச்சம் பரவியது. மைனா பொந்துக்குள்ளிருந்து வெளியே வந்தது. இறக்கையை விரித்து ஒலி எழுப்பிக்கொண்டு அது கடவுளுக்கு வணக்கம் செலுத்தியது. பின் பறந்து சென்றது. தரைமீது ஆலங்கட்டியால் காயமடைந்து வீழ்ந்து கிடந்த காகங்கள் மைனா பறந்து செல்வதைப் பார்த்து மிகப்பெரிய பரிதாபத்தோடு கேட்டன: "மைனா தங்கையே! நீ எங்கே இருந்தாய்? உன்னை ஆலங்கட்டியின் தாக்குதலிலிருந்து யார் காப்பாற்றியது? 'நான் மாமரத்தின் மீது தனியாக உட்கார்ந்து கடவுளை வேண்டிக்கொண்டிருந்தேன். துன்பத்தில் அகப்பட்ட உதவியில்லா ஜீவன்களை கடவுளை தவிர வேறு யார் காப்பாற்றுவார்? என்று மைனா கூறியது. ஆனால் கடவுள் ஆலங்கட்டி மழையிலிருந்து மட்டும் தான் காப்பாற்றுவாரா, மைனாவை மட்டும் தான் காப்பாற்றுவாரா! இல்லை. எவன் கடவுள் மீது நம்பிக்கை வைக்கின்றானோ, எவன் கடவுளை நினைக்கின்றானோ அவனுக்குக் கடவுள் எல்லா ஆபத்து நேரங்களிலும் உதவுகிறார். அவனை பாதுகாக்கிறார்.

கருத்து, 'நம்பினோர் கெடார்! இது நான்குமறை தீர்ப்பு.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல.

– திருக்குறள்

மேலே கூறியுள்ளவை சம்பந்தமானஎனது கருத்தினை வாசகர்களுக்காகக்கூற நான் விழைகின்றேன்: விருப்பும் வெறுப்பும் இல்லாதவனாகிய இறைவனின் திருவடிகளை தம் மனத்தால் நினைப்பவர்களுக்கு எக்காலத்துக்கும் பிறவித் துன்பங்கள் இல்லை.

அது மட்டுமின்றி மற்றொரு கருத்தும்இக்கதையில் அடங்கியுள்ளது. "யார் ஒருவர் சண்டைக்காரர்கள் நிறைந்த உலகத்திலிருந்து விடு பட்டு தனிமையில் இருந்து இறைவனை நினைக்கின்றானோ அவன் இறை அருள் பெற்று இறைவனடி சேருவான்."

இறைவனை நாம் எவ்வளவுக்கெவ்வளவு நேசிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் அவன் நம்மிடம் வருவான்; நம்மிடம் பேசுவான்; நம்முடன் இருப்பான். அவனிடத்திலுள்ள அன்பு அதிகமாகுந்தோறும் அதன் ஈர்ப்புசக்தியும் அதிகமாகிறது. தூய்மையானதும் உண்மையானதுமான நிபந்தனையற்ற அன்பானது இறைவனை நம்மிடம் இறங்கிவரச்செய்கிறது. வேறு எந்தப் பொருளிடத்திலும் பற்றின்றி இருப்பது, இறைவனிடத்தில் நாம் வைத்துக்கொள்ளும் அன்பிற்கு வலுவூட்டுகிறது. சுருங்கச்சொன்னால், இறைவனிடத்திலுள்ள அன்பும் விசுவாசமும் அதிகரிக்கும்பொழுது உலகப்பற்று தானாகவே அற்றுவிடும். ஏனென்றால், மற்ற பொருட்கள் மீது வைக்கும் ஆசையையும் பேராசையையும் இறைவனிடத்தில் வைத்துக்கொள்வதே சாலச்சிறந்தது. அவ்வாறான மனம்தான் ஆத்மாவை இறைவனடி சேர்க்கச் செய்கிறது. எல்லா சாஸ்திரங்களும் அதைத்தான் கூறுகின்றன.

புராதன இந்தியாவில் எத்தனையோநிகழ்வுகளும் கதைகளும் நடந்திருக்கின்றன.நவீன காலத்திலும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இறைவனிடத்தில் முழுமையான நம்பிக்கையும்விசுவாசமும் வைத்துக்கொள்பவர்களிடத்தில் இறைவன் வருகிறான்; காட்சி தருகிறான்; பேசுகிறான். விசுவாசம் இல்லாதவர்களிடத்தில் இறைவன் வரமாட்டான். அவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது ஒவ்வொருவரையும் இறைவன் கண்காணித்துக்கொண்டுதான் இருக்கிறான் என்பது தெரியவருகிறது. நாம் ஒவ்வொருவரும் இறைவனின் சக்தியால் மட்டும்தான் இயங்கிக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால் அவன் நமக்குள்ளே உறைந்திருக்கிறான். அவ்வாறிருக்கையில் அவனுக்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டும். இறைவனுக்கு முதலிடம் கொடுப்பவர்களுக்கு இறைவன் உடனிருந்து அவர்களுடைய ஒவ்வொரு தேவைகளையும் வேண்டும் வண்ணம் பூர்த்தி செய்வான். இறைவனை உணர்வது சாதாரண விஷயம் அல்ல. உதாரணமாக, "இறைவனை உணராதவர்கள் "தம்முடைய கர்மவினைகளுக்கு தாமேதான் காரணகர்த்தா" என்று கூறமாட்டார்கள். இறைவனை உணர்ந்தவர்கள் மட்டும்தான் தாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் "தாமே தான்" காரணம் என்பதை அறிவர். அவ்வாறு உணர்ந்தவர்களுக்கு இறைவனை உணர வெகுநாட்கள் தேவைப்படாது. அவ்வாறு தம் கர்மவினைகளுக்காக பழியை போடமாட்டார்கள். அதற்காக பிறரை குறைகூறமாட்டார்கள். எத்தனையோ பேர்கள் தன்னுடைய கர்மா அல்லது தன்னுடைய துன்பங் களுக்கெல்லாம் காரணம் பிறர்தான் என்று பசுமரத்தாணிபோல் மனதில் பதியச்செய்து அதற்கேற்றவாறு வாழுகின்றனர். சிலர் இறைவன்மேல் பழிபோடுகின்றனர். அதுபோன்ற எண்ணங்கள் கர்மவினைகளை தீர்க்காது. கர்மா மேலும் மேலும் வளரும். அதனால் துன்பங்கள் அதிகரிக்கின்றன. அவற்றை இவ்வாறான பழியை போட்டு வளரச்செய்வதும் தாமேதான். அவ்வாறிருக்கையில் இறைவனை அறிவது என்பது மிகவும்மிக கடினமே. அதற்கு குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸரின் போதனைகளை கீழ்படிதலுடன் ஏற்று கடைபிடித்தால் நிச்சயம் இறைவனுடன் பேசவும் அவனை அறியவும் குருதேவரே உடனிருந்து உதவி புரிவார் என்பதில் ஐயமில்லை.

"ஜெய் குரு"

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909

# நானும் ஒரு வட்டிக்கடைக்காரன் ஆகியிருப்பேன்!

கணவனை இழந்த ஒரு குடியானவப் பெண்மணி, பெரியவாள் தரிசனத்துக்கு வந்தாள்.

“ரொம்பக் கஷ்டப்படறேன், சாமி. இரண்டு புள்ள குட்டிங்க இருக்கு. அவங்க போயி இரண்டு வருஷமாச்சு.ஆபீசிலேர்ந்து என்னவோ பணம் வரும்னு சொன்னாங்க. இன்னும் வரலை. பெரிய அதிகாரிங்ககிட்டேவெல்லாம் நேர்ல போய்ச் சொன்னேன். சாமிதான் வழி செய்யணும்” என்று வேண்டிக் கொண்டாள்.

பெரியவாள் அவளுக்கும் குழந்தைகளுக்கும் சாப்பாடு போடச் சொன்னார்கள். அவள் விடை பெற்றுக் கொள்ள வந்தபோது பஸ் டிக்கெட்டுக்காக இருபத்தைந்து ரூபாய் கொடுக்கச் சொன்னார்கள்.

அவள் வீடு திரும்பியதும் ஒரு பதிவுத் தபால் காத்துக் கொண்டிருந்தது. அவள் புருஷன் வேலை பார்த்த கம்பெனியிலிருந்துதான். உள்ளே செக் ஒன்றரை லட்சத்துக்கு. பிராவி டென்ட் தொகை, கிராஜுவிட்டி எல்லாமாக.

மறுநாளே மறுபடியும் தரிசனத்துக்கு வந்தாள் அந்தப் பெண்மணி. மகிழ்ச்சியுடன் பணம் கிடைத்த விவரத்தைப் பெரியவாளி டம் தெரிவித்து விட்டு ரூபாய் இருபத் தைந்தை எதிரே வைத்தாள்.

“சாமி கொடுத்த பணம் !”

“திருப்பித் தரவேண்டாம். நீயே வச்சுக்கோ. இந்த இருவத்தஞ்சு ரூபா வந்தப்புறம் தானே லட்சம் வந்தது. இதுவும் உங்கிட்டயே இருக்கட்டும்...”

உத்தரவுக்குக் கீழ்ப் படிந்து அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு போனாள் அந்தப் பெண்மணி. அவள் சென்ற பின் பெரியவா, சிஷ்யர்களிடம் சொன்னார்;

“பணத்தைத் திருப்பி வாங்கிக் கொண்டிருந் தால் நானும் ஒரு வட்டிக்கடைக்காரன் ஆகியிருப் பேன் !”

– காஞ்சி மகான் தரிசனம்







வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்

தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# தொடர் பிரச்சனைகளை போக்கும் எளிமையான பரிகாரங்கள்

உங்கள் வீட்டுக்குள் தென்கிழக்குப் பகுதி எது என்பதைக் கண்டுபிடித்து அந்தப் பகுதியில் ஒன்பது மீன்கள் கொண்ட மீன் தொட்டி ஒன்றை வையுங்கள். இதிலும் முக்கியமான ஒரு விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதாவது தொட்டியில் இருக்கும் மீன்களின் எண்ணிக்கை ஒன்பதாகத்தான் இருக்க வேண்டும். அதில் எட்டு மீன்கள் கோல்பிஷ் என்று சொல்லப்படும் மீன்களும் (சிவப்பு அல்லது பொன்நிறம்) ஒரு மீன் கருப்பு நிறத்திலும் இருக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் பணமும் அதிர்ஸ்டமும் உங்களை நோக்கி பாசக்கரம் நீட்டும்

வீட்டில் உள்ள கிழக்குப் பகுதியில் எந்த இடத்திலாவது சில்லறை காசுகள் போட்ட பானை ஒன்றை வையுங்கள். இதற்காக சிறுவர்கள் கூட்டாஞ்சோறு ஆக்கும் பானை ஒன்றை நீங்கள் பயன்படுத்துவதுதான் சிறப்பு. இந்த பானை நிறைய மாற்றப்பட்ட சில்லறைக் காசுகளைப் போட்டு அதன் வாயை மூடாமல் கிழக்கு பக்கத்தின் ஒரு பகுதியில் வையுங்கள். முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால், இப்படி ஒரு பானை அந்தப் பகுதியில் இருப்பது எவருக்கும் தெரியக்கூடாது. அதாவது, யாருடைய பார்வையிலும் படாத ஓர் இடத்தில் தான் இந்தப் பானையை வைக்க வேண்டும்.



சாதாரண அறைகளில் குடியிருப்பவர்கள் கிழக்கு பக்கத்தில் உள்ள ஓர் இடத்தில் இந்தப் பானையை வைக்கலாம். இப்படி செய்வதன் மூலம் உங்களுக்கு மேலதிகமாக பணம் வந்து சேருவதை நீங்கள் அனுபவ ரீதியாக பார்த்துக் கொள்ளலாம்

திருவோணம் அன்று விஷ்ணுவை துளசி மாலை போட்டு துவரம் பருப்பு பாயசத்தினால் நிவேதனம் செய்து அதை தானம் செய்து வர நிலம் வாங்கும் யோகம் உண்டாகும்

சாப்பாட்டு அறையில் பிரேம் போட்ட வட்ட வடிவமான கண்ணாடி ஒன்றை மாட்டி வையுங்கள். இதிலும் முக்கியமான ஒரு விஷயத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். அதாவது, சாப்பாட்டு அறை சுவற்றில் மாட்டப்படும் அந்தக் கண்ணாடியில் மேசைமீதுள்ள உணவுவகைகள் தெரிய வேண்டும். இப்படி செய்வதன் மூலம், உங்களுக்குக் கிடைக்கும் பணம் இரண்டு மடங்காக அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

பணம் அதிகமாக கைமாறும் காரியம் ஒன்றில் நீங்கள் கலந்துகொள்ளச் செல்லும் போது, காணி விற்றல், வீடு கட்டல், சிகப்பு அல்லது இளம் சாம்பல் நிற உடைகளை அணிந்து செல்லுங்கள். உடைகள் இல்லையென்றால் இந்த நிறத்தில் கைக்குட்டை ஒன்றையாவது எடுத்துச் செல்லுங்கள். இதனால் சில அதிசயங்களும் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது

நீங்காத உடல் பிரச்னை இருந்து வந்தால், காரணம் தெரியாமல் இருந்தால் பப்பாளி பழம் ஒன்று எடுத்து தலையை வலது புறமாக 27 முறை சுற்றி பின்பு அதை பசுவிற்க்கு கொடுக்க, உடலில் நல்ல முன்னேற்றம் தெரியும். குழந்தைகள் திருஷ்டியால் அழுது கொண்டே இருந்தால் பப்பாளி மரத்தின் இலையை சிறிது நேரம் குழந்தையின் நெற்றியிலோ அல்லது வயிற்றிலோ வைத்திருக்க, திருஷ்டி நீங்கி அழுகை நிற்கும்.

மன நிம்மதி இல்லாமல் அவதிப்படுவோர் வெள்ளை அரளியை தன்னோடு வைத்திருக்க மனம் அமைதி பெரும். முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாறும் சமயங்கள் மற்றும் தன்னம்பிக்கை குறைவான சமயங்களில் சிவப்பு அரளியை தம்மோடு வைத்திருக்க மேற்கண்டவை நீங்கும்

அரசு வேலை மற்றும் வேலை கிடைக்க சனிக்கிழமை அன்று ஊர வைத்த எள்ளை மதியம் 12 க்குள் எருமைக்கு வழங்கி வரவும்

வாகன விபத்து அடிக்கடி நடக்கும் தன்மை உடையோர், நில மற்றும் மனை கட்டி தருதல் போன்ற வியாபாரம் செய்வோர் கடுகு எண்ணையில் மாதம் ஒரு முறை உடல் முழுதும் தடவி குளிக்க நன்மை பெருகும். மேலும் செவ்வாய் தோஷம் உள்ளோர்களும்,கணவன் மனைவி சண்டை அடிக்கடி நடக்கும் குடும்பங்களும் இதை செய்யலாம். திருமணம் தாமதம் ஆகும் இளைஞ்ச இளைஞ்சிகளும் இப்படி செய்யலாம்.

வேலை தேடி இன்டர்வ்யூ செல்லுமுன் ஏதேனும் சிறிதளவு இனிப்புடன் பச்சை ஏலக்காய் சேர்த்து உண்டுவிட்டு ஒரு டம்ப்ளர் மிதமான சூட்டில் நீரை அருந்தி விட்டு செல்ல, காரியம் நிறைவேறும்.

வியாபாரம் தொழில் செல்வ நிலை மேலோங்க வியாழக்கிழமைகளில் ஊர வைத்த கருப்பு உளுந்தை தொடர்ந்து 11 வாரங்கள் குரங்குகளுக்கு இட்டு வர, செல்வ நிலை உயரும். தொடர்ந்து செய்ய முடியாதவர்கள் முடிந்த வியாழக்கிழமைகளில் எல்லாம் செய்து வந்தாலும் பலன் உண்டு

கடன் கொடுத்தோ, பெற்றோ அவதிப்படுவோர் கட்டாயம் கடுகு எண்ணையில் உணவு சமைத்து சாப்பிட நன்மை உண்டாகும்.

புதிய வீடு அல்லது கடைகளுக்கு: முழு மஞ்சள் 7, கொட்டை பாக்குகள் 7, சிறிய வெள்ளி தகடு, உலோகத்தால் ஆன நாகர் 2, இவற்றை எல்லாம் மூடியுடன் கூடிய வெண்கல கலசத்தில் இட்டு மேற்கு புறமாக வைத்திருக்க சகல நன்மைகளும் உண்டாகும்.

வீட்டில் உள்ளவர்க்கு ஏதேனும் தொற்று நோய் வந்து அவதிப்பட்டால்சிறிய மண் சட்டியில் மஞ்சள் லட்டு, ஒரு முட்டை, 2 நாணயங்கள் மற்றும் சிறிது குங்குமம் வைத்து நோய்வாய்பட்டவரின் தலையை 3 முறை வலமாக மட்டும் சுற்றி 4 ரோடுகள் சேரும் இடத்தில் மதியம் 12 மணிக்கு எறிந்து விட, நோய் விலகும்.

– கணேசன், புளியரை.

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

www.aanmeegamalar.com

# நம் வாழ்வு முறையும் 3 நுட்சுமமான அடிப்படை கூறுகளும்

ஒருவரின் சத்வ, ரஜ, தம குணத்தை வைத்து ஒருவருடைய வாழ்க்கை முறை பிரிக்கப்படுகிறது. நாம் எதை தேர்ந்தெடுக்கிறோமோ அதை பொறுத்து நம் வாழ்க்கை முறை ஏற்பட்டு, அதன் அடிப்படையில் நம்மிடையே உள்ள சூட்சும கூறுகள் அதிகரிக்கும்.

மூன்று சூட்சுமமான அடிப்படை உறுப்புகளும் நம் வாழ்க்கை முறையும்.

## உணவு

சத்வ: கோதுமை, வெள்ளரி, பால், தயிர், வெண்ணெய், பச்சை காய்கறிகள், பருப்பு வகைகள்.

ரஜோ: அதிக உப்பு, கசப்பு, துவர்ப்பு, காரமான உணவு வகைகள் வெங்காயம், பூண்டு.

தமோ: சமைக்காத உணவுகள், செறிமானத்திற்கு கஷ்டமான உணவுகள், அசைவ உணவுகள், மது பானங்கள்.

## இசை

சத்வ: ஞானிகள் எழுதிய பாட்டுகள்.

ரஜோ: நாட்டுபுற பாடல்கள், குத்துப் பாடல்கள், சினிமா பாடல்கள்.

தமோ: வன்முறையும், போதையும் தூண்டத்தக்க இசை

## நிறங்கள்

சத்வ: வெள்ளை, மஞ்சள், நீலம்.

ரஜோ: சிவப்பு, பச்சை, ஊதாநிறம்.

தமோ: கருப்பு அல்லது கருப்பு அதிகம் இருக்கும் வண்ணம்.

## உடை

சத்வ: பருத்தி, பட்டு, இயற்கையான நூலிழைகள்.

ரஜோ: சினிமா பாடல்கள், மிருகங்களின் தோல்

தமோ: மனிதனால் உருவாக்கப்பட்ட நைலான் போன்ற செயற்கை இழைகள், கிழிந்த உடைகள்.

## படம்

சத்வ: சமுதாயத்தை சாத்வீக நிலைக்கு உயர்த்தும், வழி நடத்தும் படங்கள்.

ரஜோ: அதிரடிபடங்கள், உணர்ச்சி தூண்டும் படங்கள்

தமோ: ஆபாசம், பேய் படங்கள்.

## புத்தகம்

சத்வ: ஆன்மீக ஞானத்தை அதிகப்படுத்தும் புத்தகங்கள்.

ரஜோ: நம் உணர்வுகளையும் பற்றையும் அதிகப் படுத்தும் புத்தகங்கள்

தமோ: ஆன்மீகத்தை குறைக்கும் புத்தகங்கள், சமுதாயத்தை சீர்குலைக்கும் புத்தகங்கள்.

## நட்பு, பொழுதுபோக்குகள்

சத்வ:6 அடிப்படை தத்துவங்கள் அடிப்படையில் ஆன்மீகத்தை கடைப்பிடித்து இறைவனை உணர்வதற்காக சாதனை புரியும் சாதகர்கள்.

ரஜோ: சமூக நிகழ்ச்சிகளில் ஏற்படக்கூடிய உலகியல் விஷயங்கள், வியாபாரம்.

தமோ: கெட்ட சவகாசம்

## திருமணம்

சத்வ: ஆன்மீக முன்னேற்றமே அத்தம்பதியின் முக்கிய லட்சியம்; அதனுடன் எதிர்பாற்பற்ற ஆன்மீக அன்பு நிறைந்திருக்கும்.

ரஜோ: எதிர்பார்ப்புடன் கூடிய அன்பு, சொத்து சேர்ப்பதே முக்கியக் குறிக்கோள் .

தமோ: சண்டை, சச்சரவு, வன்முறை

நம்மிடையே எந்த சூட்சுமமான கூறு பெரும்பாலும் இருக்கிறதோ அதற்கேற்றாற் போல நாம் சத்வ, ரஜ, தம அதிர்வலைகளை வெளிப்படுத்துகிறோம். நம்மிடையே சத்வ குணம் மேலோங்கி இருந்தால் நம் தனித்தன்மை மேம்பட்டு இருக்கும்; தொடர் வெற்றி கிடைக்கும்; பணித்துறையிலும் வாழ்விலும் மனநிறைவு ஏற்படும்.

நாம் ஆன்மீக பயிற்சியினால் நமுடைய சத்வ கூறுகளை அதிகரித்துக் கொள்ள முடியும். மேலும் ரஜ தம தாக்கத்தில் இருந்து விலகி இருக்க வேண்டும் .

ஆன்மீகப் பயிற்சிக்கு நம்முடைய தொடர்பு என்பது மிகுந்த உதவி புரியும் . தீய சக்தியானது தமோ கூறுகள் நிறைந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு மக்களை தீய காரியங்களில் ஈடுபட வைக்கும், மேலும் தர்மத்தை குலைக்கும்.

மேலும் தகவல்களுக்கு:
www.ssrf.org, செல்: 9380949626








## பஞ்ச பூதங்களுக்குரிய மூலிகைகள்

உலகம் முழுவதும் பஞ்ச பூதத்தால் உருவானதாகும். அதேப்போன்று பஞ்சபூதங்களுக்கு உரிய கடவுள்களும் வரையறுத்துக் கூறுகிறது இந்துமதம்.

இந்த வகையில் பஞ்ச பூதங்களுக்கு உரிய மூலிகைகளையும் வரையறுத்து கூறப்பட்டுள்ளது. பஞ்ச பூதங்களும் ஒவ்வொரு மூலிகைக்கு அதிபதியாக விளங்குகிறது. அந்தவகையில் பஞ்ச பூதங்களுக்குரிய மூலிகைகள்

நிலம்........................................ அருகம்புல்
நீர்........................................ மாவிலை
நெருப்பு........................................ வாழை இலை
காற்று........................................ வேப்பிலை
ஆகாயம்........................................ வெற்றிலை

ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி, குருபிரியா Cell 9894595909
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும் ஆன்மிக மாதமிருமுறை இதழ்







# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து பிரதிகளையும் பார்த்து படித்து மகிழ

**www.aanmeegamalar.com**

பாருங்கள் அனைவருக்கும் பகிருங்கள்

## தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com

# ஐயப்பனுக்குரிய ஆறுபடைவீடுகள்

சாஸ்தா என்ற பெயரில் நடத்தப்படும் வழிபாடும், ஐயப்பன் வழிபாடும் ஒன்றாகவே உள்ளதாக கூறப்படுகிறது. தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் ஐயனார் வழிபாடும் ஐயப்பன் வழிபாடும் ஒருங்கே சேர்த்து பார்க்கப்பட்டாலும் இரண்டுக்குமிடையில் முக்கிய வித்தியாசங்கள் உண்டு. ஐய்யப்பன் வழிபாடு கேரளத்தில் இந்து சமய பிராமண முறையைத் தழுவியது, ஐயனார் வழிபாடு தமிழர் மத்தியில் காணப்படும் ஒரு சிறுதெய்வ வழிபாடாக செய்யப்படுகிறது.



பல பெயர்களில் வழிபட்டாலும் ஐயப்பனுக்குள் அனைத்து சாஸ்தாவும் அடக்கமாகிவிடுகின்றனர். ஐயப்பனுக்கு உள்ள பல பெயர்களில், 1.மணிகண்டன், 2. பூதநாதன் 3.பூலோகநாதன், 4. தர்மசாஸ்தா 5.எருமேலிவாசன், 6.ஹரிஹரன், 7.கலியுகவரதன், 8.கருணாசாகர், 9.லக்ஷ்மண பிராணதத்தா, 10.பந்தளவாசன், 11.பம்பாவாசன், 12.ராஜசேகரன், 13.சபரி, 14.சபரீஷ், 15.சபரீஷ்வரன், 16.சபரி கிரீஷ், 17.சாஸ்தா, 18.வீரமணி ஆகிய பதினெட்டு பெயர்கள் மிக முக்கியமான பெயர்களாகும்.

ஐயப்பன் வரலாறு

கேரளாவில் பந்தள மகாராஜா குழந்தையில்லாமல் மனம் வருந்தி வந்தார் அந்த சமயத்தில் மகிஷி என்ற அரக்கி ரிஷிகளை துன்புறுத்தி வந்தாள். அவர்களுக்கு உதவ சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்தவர்தான் ஐயப்பன். விஷ்ணு மோகினியாக மாற, சிவனுக்கும் மோகினிக்கும் (விஷ்ணுவுக்கும்) ஐயப்பன் பிறந்தார்.

பக்திமானான பந்தள மகாரஜாவின் பிள்ளை யில்லா குறையைத் தீர்க்கவே பரந்தாமனும், பரம்பொருளும் குழந்தையாக பிறந்த ஐயப்பனை அங்கேவிட்டுச் சென்றனர். வேட்டைக்கு வந்த பந்தள மன்னன் குழந்தையின் அழுகுரல் கேட்டான். எங்கு குழந்தை அழுகிறது என பதைபதைத்து தேடி மரத்தடியில் ஜொலிக்கும்தேஜசுடன் குழந்தை ஐயப்பனைக் கண்டான்.

ஆண்டாவா! என் குழந்தையில்லா குறை தீர்க்கவே இந்த குழந்தை இங்கு இருக்கிறதா என மகிழ்ந்து அந்தகுழந்தையை அரண்மனை கொண்டு









அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033





சென்றான். அரசியும் மகிழ்ச்சி அடைந்தாள். இருவரும் இறைவனுக்கு நன்றி செலுத்தினர். குழந்தையை கண்ட அனைவரும் சொக்கிப் போனார்கள்.ஜோதிடர்கள் இந்தக் குழந்தை தெய்வாம்சம் பொருந்திய குழந்தை எனக் கூறினர். கழுத்தில் மணியுடன் கண்டெடுக்கப்பட்டதால், குழந்தைக்கு மணிகண்டன் என்றுபெயரிட்டனர்.

ஐயப்பனை அன்போடு பாராட்டி சீராட்டி வளர்த்து வந்தனர். இந்நிலையில் மகாராணிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அரசனும் அரசியும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. மணிகண்டன் வந்த நேரம் நமக்கும்குழந்தை பிறந்தது என ஆனந்தம் அடைந்தனர். ஆனால் எங்குமே நல் மனதைக் கெடுக்கும் புல்லுருவிகள் இருக்குமல்லவா? அமைச்சர் வடிவில் அந்த புல்லுருவி விளையாட ஆரம்பித்தது.

ஐயப்பன் உங்களுக்கு பிறந்த மகன் அல்ல. ஆனால் அவனையே தலைப்பிள்ளை போல் சீராட்டி வளர்க்கிறீர்கள். அதனால் அடுத்த மன்னனாக அவன் வரவே வாய்ப்பிருக்கிறது. உங்களுக்கு பிறந்த குழந்தையிருக்க வேறுயாரோ எப்படி அரசனாவது என அரசியின் மனதில் நஞ்சைக் கலந்தனர் சிலர். தீயபோதனைகளால் அரசியும் மனம் மாறினாள். தான் வயிற்று வலியால் அவதிப்படுவதாக பொய்யுரைத்தாள். அரசவை வைத்தியரை புலிப்பால் குடித்தால் மட்டுமே தன் வயிற்று வலி தீரும் என கூற வைத்தாள்.

இவை அனைத்தையும் அறிந்த ஐயப்பன், தாய்க்கு புலிப்பால் கொண்டு வர காடு நோக்கி புறப்பட்டான். வழியில் அரக்கி மகிஷி ஐயப்பனைத் தடுதாள்.வில்லெடுத்தான் வில்லாளி வீரன். வதம் செய்தான் மகிஷியை. அவன் அவதார மகிமை பூர்த்தி பெற்றது.

அரக்கியின் செயலால் வேதனையில் இருந்த தேவர்கள் தங்களுக்கு ஐயப்பன் மூலம் விமோசனம் கிடைத்ததை எண்ணி பூமாரி பொழிந்தனர். இந்திரனே புலியாக மாற, மற்ற தேவர்கள் புலிப்படையாக மாறி, புடை சூழ, புலிமேல் ஏறி பந்தளநாட்டிற்கு சென்றார் ஐயப்பன். புலிப்படையுடன் ஐயப்பன் வருவதை கண்ட மக்கள் பதறிப் போனார்கள். அரசி தான் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டு புலிகளை திருப்பி அனுப்புமாறு வேண்டினாள். ஐயப்பனும் அவ்வாறே செய்து அருளினார்.

தன் அவதார காரணம் பூர்த்தி பெற்றதால் தான் சபரிமலையில் தவமிருக்கப் போவதாகவும் தன்னை தரிசிக்க வேண்டுமானால் அங்குவருமாறும் கூறி சபரி மலையில் 18 படிகளுக்கு மேல் தவக் கோலத்தில் அமர்ந்தார் அருள்தரும் ஐயப்பன்.

கடுமையான விலங்குகள் நடமாட்டமுள்ள காட்டில், ஐயப்பனை காண அக்காலத்தில் எந்த வித வசதி வாய்ப்பும் இல்லாத காரணத்தால், சபரிமலைக்கு சென்றால் திரும்பி வருவோமோ வரமாட்டோமோ என்ற அச்சத்தின் காரணமாகவே, ஒருசிலரே ஐயனை காண விழைந்தனர். அவ்வாறு ஐயப்பனை காண மாலை அணிந்து சென்று வருபவர்களை மக்கள் ஐயப்பனுக்கு நிகராக போற்றி வழிபட்டனர். இதன் காரணமாகத்தான் மாலை அணிந்தவர்களை அவர்களின் சொந்த பெயரில் அழைக்காமல், ஐயப்ப சாமி, ஐயப்பன், என்று அழைத்தனர். சமுதாயத்தில் மிகவும் மதிப்பும் மரியாதையுடனும் மாலை அணிந்தவர்களை மக்கள் மதித்தனர்.

வீட்டில் வசதி வாய்ப்போடு, சொகுசாக வாழ்ந்த மக்கள், எந்த வசதியும் இல்லாத காட்டில் சென்று ஐயனை தரிசிக்க ஏதுவாக, 48 நாட்கள் ஒரு மண்டலம், தாங்கள் அனுபவித்து வந்த சொகுசு வாழ்க்கையை மறந்து, தரையில் படுத்து, ஒருவேளை உணவு, மற்ற நேரத்தில் பால் பழம் போன்றவற்றையும், குடும்ப உறவுகளின் பந்தத்தில் இருந்து சற்று ஒதுங்கியும், காலில் செருப்பு அணியாமலும், ஆடம்பர உடை அணியாமலும், தலை முடி, நகம் போன்றவற்றை அழகுப்படுத்திக் கொள்ளாமல், குளிர் மிகுந்த அதிகாலையிலும், சூரிய அஸ்தமனத்தில் குளிர் ஆரம்பிக்கும்போதும் பச்சைத் தண்ணீரில் குளித்து தங்கள் உடலை காட்டில் செல்வதற்கு பழக்கப்படுத்திக் கொண்டனர்.

இளம் பருவப்பெண்கள் தங்களது உடல் இயற்கை மாற்றத்தின் காரணமாக ஏற்படும் உதிரப் போக்கு சமயத்தில், மேற்கண்டவாறு கடும் காட்டில் செல்ல முடியாது, மேலும் அவர்களின் இயற்கை மாற்றத்தால் வெளியேறும் இரத்தத்தின் வாசம் மிருகங்களை எளிதாக ஈர்க்கும் என்பதால் இளம்பருவப் பெண்களை ஐயப்பன் மலைக்கு வருவதை தவிர்த்து, அதை சாஸ்திரத்துடன் இணைத்துவிட்டனர்



நமது முன்னோர்கள். (ஐயப்பன் புராணத்திலும், சரித்திரத்திலும் எந்த இடத்திலும் பெண்களுக்கு ஐயப்பன் தடை போடவில்லை) முழுக்க முழுக்க பெண்களின் பாதுகாப்பிற்காக ஏற்பட்ட நடைமுறைதான் இது.

ஐயனை காண இருமுடி கட்டி, முன் முடியில் ஐயப்பனுக்குரிய அபிஷேக நெய், விபூதி, சந்தனம், குங்குமம், போன்ற பூஜை பொருட்களையும், பின் முடியில் ஐயனை காண செல்லும் பக்தர்கள் சமைத்து சாப்பிட தேவையான அரிசி, உணவு பொருட்களையும் சுமந்து சென்று ஐயனை காண வேண்டும்.

ஐயப்பனின் அறுபடை வீடுகள்

தமிழ் கடவுளான முருகனைப் போல் தர்ம சாஸ்தாவான ஐயப்பனுக்கும் அறுபடை வீடுகள் உள்ளன. அவை:

1 ஆரியங்காவு
2 அச்சன்கோவில்
3 குளத்துப்புழா
4 எரிமேலி
5 பந்தளம்
6 சபரிமலை

## 1. ஆரியங்காவு

நெல்லை மாவட்டம் செங்கோட்டையில் இருந்து 20கிலோமீட்டர் தொலைவில், கேரள மாநிலத்தில் இந்த ஊர் அமைந்துள்ளது. இங்குள்ள கோயிலில் ராஷ்ட்ர குலதேவி புஷ்கலையுடன் அரசராக அய்யப்பன் காட்சி தருகிறார்.

## 2. அச்சன்கோவில்

செங்கோட்டையில் இருந்து 30கிலோமீட்டர் தொலைவில் கேரள மாநிலத்தின் அடர்ந்த வனப்பகுதியில் இது அமைந்துள்ளது. பரசுராமரால் தோற்று விக்கப்பட்ட இந்த கோயிலின் விக்ரகம் மட்டுமே பழமை மாறாதது என்கிறார்கள். இங்கு வனராஜனாக அமர்ந்த நிலையில் கையில் அமுதமும் கருப்ப னின் காந்தமலை வாளும் ஏந்திய திருக்கோலத்தில் அய்யப்பனை தரிசிக்கலாம். இவருக்கு இருபுறமும் பூர்ணா, புஷ்கலை தேவியர் மலர் தூவுவது போல் காட்சி தருகின்றனர். இங்குள்ள ஐயப்பனைகல்யாண சாஸ்தா‘ என்று அழைக்கிறார்கள். இதனால், திருமணத்தடை உள்ளவர்கள் இங்கு அதிகம் வந்து வழிபடுகின்றனர்.

## 3. குளத்துப்புழா

செங்கோட்டையில் இருந்து 50கிலோமீட்டர் தொலைவில் கேரளாவில் அமைந்துள்ளது இது.

இங்கு அய்யப்பன் குழந்தை வடிவில் குடி கொண்டுள்ள தால்பால சாஸ்தா‘ என்று அழைக்கப்படுகிறார். இதனை உறுதிப்படுத்தும் வகையில், இந்த கோவில் வாசலும் சிறு குழந்தைகள் நுழையும் அளவுக்கே கட்டப்பட்டு உள்ளது.

### 4. எரிமேலி

கேரளாவில் உள்ள இத்தலத்தில் அய்யப்பன் கைகளில் வில், அம்பு ஏந்தி வேடன் போன்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். எருமேலியும் கேரளாவிலேயே உள்ளது.

### 5. பந்தளம்

இந்த தலத்தில் தான் பந்தள மன்னன் ராஜசேகர பாண்டியனால் அய்யப்பன் சீரோடும், சிறப்போடும் வளர்க்கப்பட்டார். அந்த நாட்டு மன்னன் கட்டிய கோயில் இங்கு உள்ளது. இங்கு சுவாமி ஐயப்பனுக்குரிய உரிய திருஆபரணங்கள் வைக்கப்பட்டுள்ளன. பந்தளம் என்பது ஐயப்பன் வாழ்ந்ததாக கரு தப்படும் பந்தளம் அரண்மனை இருக்கும் இடம். இது அச்சன்கோவில் நதியின் கரையில் அமைந்துள்ளது. மகரவிளக்கின் போது இங்கிருந்த கொண்டு செல்லப்படும் ஆபரணங்கள் தான் ஐயப்பனுக்கு அணிவிக்கப்படுகின்றன. இதன் அருகில் செங்கனூர் ரயில் நிலையம் உள்ளது.

### 6. சபரிமலை

கேரளாவில் உள்ள இங்கு தர்ம சாஸ்தாவான ஐயப்பன் தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு யோக சின் முத்திரை தாங்கி கேட்பவர்களுக்கு கேட்டவரம் வாரி வழங்கும் வள்ளலாக காட்சி தருகிறார். சபரிமலைக்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள், ஐயப்பனின் அறுபடை வீடுகளான இந்த 6 கோயில்களுக்கும் சென்று வழிபட்டால் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வார்கள் என்பது நம்பிக்கை.

இயற்கையை விரும்பும் ஐயப்பனை முடிந்த அளவு நாமும் சென்று தரிசித்து இயற்கைக்கு எந்த இடையூறும் செய்யாமல் அவன் அருளைப் பெற்று வர ஐயன் அருளை வேண்டி நிற்போம்.

– ஆசிரியர்



# குழப்பத்தை தீர்க்கு பூஜை முறைகள்



வீட்டில் பூஜை செய்யும் போது சிலருக்குப் பல குழப்பங்கள் ஏற்படுவதுண்டு. வெற்றிலையை எப்படி வைக்க வேண்டும்? எந்த பழம் எந்த தெய்வத்திற்கு உகந்தது? பூஜையை எப்படி ஆரம்பிக்க வேண்டும்? எந்தப் பூ கொண்டு ஸ்வாமிக்கு அர்ச்சனைச் செய்வது எனப் பல சந்தேகங்கள் ஏற்படும்.

வெற்றிலைக்கு நுணியும், வாழைப் பழத்திற்கு காம்பும் அவசியம் இருக்க வேண்டும். வெற்றிலைபாக்கில் நுண்ணாம்பு இருக்கக் கூடாது.

அவல்பொறி, கடலை மற்றும் கல்கண்டு நிவேதனமாகப் படைக்கலாம். பச்சரிசியில் சாதம் செய்து தான் கடவுளுக்குப் படைக்க வேண்டும். மேலும், நாகப்பழம், மாதுளை, கொய்யா, வாழைப்பழம், நெல்லி, இளந்தை, விளாம்பழம், புளியம்பழம், மாம்பழம் ஆகிய பழங்கள் பூஜைக்கு ஏற்றவையாகும்.

வாழையில் நாட்டுப்பழம் நல்லது. குடுமி தேங்காயை சீறாக உடைத்து பிறகு குடுமியைப் பிரிக்க வேண்டும். அழுகிய தேங்காய் இருந்தால், அதனை மாற்றி வேறு தேங்காயை உடைக்கலாம். கோணலான, வழுக்கையான தேங்காய் இருக்கக் கூடாது. வழிப்பாட்டிற்கு முன்பாக சாம்பிராணி புகை போடுவது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். சாம்பிராணி வாசம் கெட்ட அதிர்வுகளை விரட்டும் ஆற்றல் கொண்டது.

கோலமிட்டு, விக்ரகங்களைச் சரியாக அமைத்துக்கொண்டு, விளக்கேற்றி, ஊதுவத்தி ஏற்றி அர்ச்சனை செய்து அதன்பின் கற்பூர ஆரத்தி செய்ய வேண்டும்.

விநாயகரை துளசியால் பூஜிப்பது தவறு. பெருமாளுக்கு அர்ச்சதையால் பூஜிப்பதும் தவறு. சிவபெருமானுக்கு தாழம் பூ ஆகாது. திருமகளுக்கு தும்பை பூ ஆகாது. பவளமல்லி சரஸ்வதிக்கும், அம்பிகைக்கு அருகம்புல்லும் பூஜைக்கு உகந்தது அல்ல. வில்வம், கொன்றை, தும்பை, வெள்ளேருக்கு, ஊமத்தை சிவனுக்கு உரியது. காளியம்மன், துர்கை, முருகனுக்கு அரளி பூக்கள் உகந்தவை.

அருகம்புல், மல்லி, சாமந்தி, நீலப்பூ, ரோஜா, பன்னீர் ரோஜா, சங்குப்பூ, தாமரை, மரிகொழுந்து, சம்பங்கி, துளசி, விரிச்சிப்பூ ஆகியவை பூஜைக்கான மலர்கள் என்று ஆன்றோர்களால் கூறப்படுகிறது.

சாமந்தி போன்ற மனமில்லாத மலர்கள் பூஜைக்கு ஒதுக்கி வைக்க வேண்டும் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால், அலங்காரத்திற்குப் பயன்படுத்தலாம். அர்ச்சிக்கும் போது முழு மலரால் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும். பூவின் இதழ்களைக் கொண்டு அர்ச்சனை செய்வது மிகவும் தவறாகும். காய்ந்துபோன மற்றும் அழுகிப்போன, வாடிப்போன, பூச்சி கடித்த பூக்களைப் பயன்படுத்த தெய்வ குற்றமாகும். இவையே பூஜை அறையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் ஆகும்.

மூ.சக்திவேல்.
செல்: 9787576858.

# பெண்கள் நிச்சயம் தெரிந்துகொள்ள வேண்டியவை?



இல்லறத்தைக் கைவிடாமல், மனதையும் பக்குவப்படுத்தி, ஆன்மிக வழியில் செலுத்தி செய்ய வேண்டியவற்றை முறையாகச் செய்து வீட்டைக் கோயிலாக மாற்றிவர்கள் பெண்களே.

அப்படிப்பட்ட பெண்கள் ஆன்மிகத்தில் நிச்சயம் தெரிந்துகொள்ள வேண்டிய சில விஷயங்கள் உண்டு. அது என்னவென்று பார்ப்போம்.

- கோலமிடும் போது தெற்கே பார்த்து நின்று கொண்டு கோலமிடக் கூடாது.
- திருமணம் ஆன பெண்கள் ஒரே ஒரு விரலில் மட்டுமே மெட்டி அணிய வேண்டும். ஒரே காலில் இரண்டு மூன்று அணியக்கூடாது. அணிவதால் ஆரோக்கியம் மற்றும் கணவனின் வளர்ச்சி (உடல், வருமானம்) பாதிப்பு அடையும்.
- கர்ப்பமான பெண்கள் உக்கிர தேவதைகள் இருக்கும் கோயிலுக்கு செல்லக்கூடாது.
- பெண்கள் கிழக்கு திசையை நோக்கி குங்குமத்தை இரண்டு புருவமத்தியிலும்உச்சந்தலையிலும் இட்டுக்கொள்ளவேண்டும். திருமணம் ஆகாதவர்கள், உச்சந்தலையில் இட்டுக்கொள்ளக்கூடாது.
- அமாவாசை நாட்களில் வாசலில் கோலம் போடக்கூடாது.
- மஞ்சள் நூல் கயிற்றில் மட்டுமே திருமாங்கல்யத்தை கோர்த்து அணிந்து கொள்ள வேண்டும்.
- பெண்கள் கோயிலில் அங்கப் ரதக்ஷிணம் செய்யக் கூடாது (பெண்களின் மார்பு பகுதி பூமியில் படக்கூடாது).
- கோயில்களில் பிரசாதமாக தரப்படும் துளசியை தலையில் வைத்துக் கொள்ளக்கூடாது.
- பெண்கள் எப்போதும் முந்தானையைத் தொங்க விட்டு நடக்கக்கூடாது.
- கோயிலில் தெய்வத்தை வணங்கும் போது பின்னங்கால்கள் இரண்டையும் சேர்த்துக்கொண்டு முன் நெற்றி தரையில் படுமாறு மண்டியிட்டு வணங்கவேண்டும்.
- தலை குளிக்கும் பொழுது சுமங்கலி பெண்கள் சிறிது மஞ்சளை உரைத்து முகத்தில் பூசிக்கொண்டு பிறகு குளிக்க வேண்டும்.
- வெள்ளிக்கிழமைகளில், விஷேச நாட்களில் (பண்டிகை நாட்களில்) பாகற்காயைச் சமைக்க கூடாது. அவ்வாறு செய்வதால் பாவம் வந்து சேரும்.

– மூ.சக்திவேல்.
செல்: 9787576858.


/NPMWAI
fb.com/Nigalkalam
fb.com/VelichamArakkattalai
fb.com/NigalkalamPunnagai
தலைநிமிரட்டும்! பத்திரிகைச் சமூகம்!!
நியூஸ் பிரஸ் மீடியா வெல்ஃபேர் அசோசியேஷன்
நம்பிக்கை ஒளியேற்று! வெற்றி நம் பக்கம்!!
வெளிச்சம் அறக்கட்டளை
Velicham Arakkattalai
இணைந்து வழங்கும்
கோவையில் பிரம்மாண்ட மேடை!
எதுவரினும் அஞ்சோம்! எமக்குத் தேவை நீதி!!
www.nigalkalam.com
நிகழ்காலம்
அரசியல், சமூக புலனாய்வு மாத இதழ்
EXCELLENCE AWARD 2017
கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் விழா!
சமுதாயத்திற்கு மக்கள் சேவை செய்த நல் உள்ளங்களுக்கு ISO சான்றிதழ் பெற்ற மற்றும் INTERNATIONAL ஒப்புதல் பெற்ற UNIVERSITY சார்பாக கௌரவ டாக்டர் பட்டமும் சான்றிதழும் வழங்கப்படும்.
நாள்: 17.12.2017
நேரம்: மாலை-5.00மணி
சமூக சேவை, கல்வித்துறை, தொழில் துறை, பிற துறைகள் சார்ந்த சாதனை புரிந்த நண்பர்கள் தொடர்பு கொள்க!
ஆர்வம் உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்!
Ct: 7871135351 / 98847 44111 / 72990 90903
பெயர், முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் மற்றும் முக்கிய குறிப்புகளுடன்
editornigalkalam@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு: நுழைவு கட்டணம் உண்டு.
*Conditions Apply
e-mail: honourablecrown4u@gmail.com
Online Media Partner
WORLD TV NEWS
Print Media Partner
குற்றம் குற்றமே
KUTTRAM KUTTRAME
நிகழ்காலம் புன்னகை
Associate Partner
MALUMIGAL SEITHY SEAFARERS NEWS
KLEAN & KLEAR facility management
SRI PADMANABHA SEVA TRUST

ADVT.

# மனிதனின் அறிவு இன்னும் வளரவில்லை

உலகத்தின் நடைமுறையை உன்னிப்பாக கவனித்து பார்த்தால் இறைவனின் லீலை புரியாத புதிராக இருக்கும். ஒரே இடத்தில் மழையை கொட்டி தீர்ப்பார். இன்னொரு பகுதியில் சொட்டு தண்ணீர் கூட இல்லாமல் சுண்ட வைப்பார். ஒரு பக்கம் காற்று. ஒரு பக்கம் நெருப்பு. ஒரு பக்கம் பிறப்பு. ஒரு பக்கம் அடுக்கடுக்கான அர்த்தமே இல்லாத இறப்புகள். இதில் எதற்கும் நம்மால் காரண காரியத்தோடு இலக்கம் பெற முடியாது. இப்படி செய்வதனால் இறைவனுக்கு கிடைக்க போகும் நன்மை என்ன? இதனால் அவர் அடையும் ஆனந்தம் என்ன? துக்கம் என்ன? சோகம் என்ன? ஒன்றுமே புரியவில்லை. எந்த கருத்தும் இல்லாமல், எந்த புரிதலும் இல்லாமல் இறைவன் செயல்பட வேண்டுமா? அவன் என்ன பித்து பிடித்து போன பைத்தியக்காரனா?

ஆதிசங்கரர் உருவாக்கிய அத்வைத கொள்கைப்படி உண்மையில் இந்த உலகில் பிரம்மம் மட்டுமே இருக்கிறது. பிரம்மத்தை தவிர வேறு எதுவும் கிடையாது. அந்த பிரம்மம் எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருக்கிறது. பிரம்மம் வேலை செய்வதாக தோன்றினால், செயல்புரிவதாக காட்சி அளித்தால், மாறுபாடு அடைவது போல் காணப்பட்டால், அது மனிதனுக்கு உண்டாகும் கற்பனையே. மனிதன் வீழ்ந்து கிடக்கும் மாயவலையே என்று கூறி கடவுள் வேலை செய்யவில்லையே என்று அடித்து சொல்கிறார் சங்கரர்.

ஆனால், இதற்கு முற்றிலும் முரணாக விசிஷ்டாத்வைதத்தை உருவாக்கி ஸ்ரீ ராமானுஜர் சிலந்தி ஒன்று தன் உடம்பி லிருந்து தானே வலையை உருவாக்குவது போல கடவுளும், தன்னிடமிருந்தே உலகத்தை உருவாக்கும் வேலையை செய்து கொண்டிருக்கிறார். அவர் சும்மா இருக்கவில்லை என்கிறார். இதில் எதை நாம் நம்புவது? மழை வருவதும், வெயில் அடிப்பதும், விருந்து வைப்பதும், பட்டினியால் சாவதும் பொய்யான தோற்றங்களா? மாய பிம்பங்களா? கற்பனை வடிவங்களா?

இதற்கு சரியான விடையை கண்ணன் கீதையில் தருகிறான். எனக்குள் பிரகிருதி யின் எட்டு அம்சங்கள் இருக்கிறது. நிலம், நீர், அக்னி, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும், மனமும், புத்தியும் தான் என்ற எண்ணமும், எனக்குள் இருந்தே வெளிவரும் அம்சங்களாகும். இந்த எட்டு அம்சங்களும் ஒருவகையில் சொல்லப் போனால் தாழ்ந்த அம்சங்களே ஆகும். இவைகளை விட உயர்ந்த அம்சம் ஒன்று உண்டு. அதாவது அனைத்தையும் சேக ரித்து தாங்கி நிற்கும் உயிர் நிலையம் நானே என்று கண்ணன் அழகாக சொல் கிறான். இந்த ஒன்பது அம்சங்கள் நிறைந் ததே உலகத்தில் உள்ள அனைத்து படைப்பு களும் ஆகும். மத்வாச்சாரியார் கூறிய துவைத கருத்துப்படி பார்த்தால் கூட, கடவுள் உலகத்தையும், ஆத்மாக்களையும் படைக்கிற வேலையை கடவுள் செய்கிறார். கடவுளின் கண்காணிப்பிலேயே இயற்கை யானது அண்ட சராசரங்கள் அனைத்தையும் தோற்றுவித்து நடத்துகிறது என்று மத்வர் தெளிவாகவும், உறுதியாகவும் கூறுகிறார்.

புனரபி ஜனனம் புனரபி மரணம்
புனரபி ஜனனீ ஜடரே சயனம்

அதாவது மனிதன் மறுபடி பிறக்கிறான். மறுபடி ஒருநாள் மரணமடைகிறான். சாவு என்பது அவனது ஜீவ பயணத்தில் முற்றுப்புள்ளி அல்ல. மீண்டும் அவனது ஆன்மா வேறொரு தாயின் கருவறையில் சிசுவாக உருவாகிறது. என்று ஆதி சங்கரர் பஜகோவிந்தத்தில் கூறுகிறார். மறுபடி பிறந்து, மறுபடி இறந்து, மறுபடியும் பிறப்பது மனிதருக்கு மட்டும் உடைய வியாதி அல்ல. இது உலகத்திற்கே பொதுவானது. உலகத்தில் உயிர்கள் ஜனனம் எடுப்பதை படைப்பு என்கிறோம். உலகம் அழிந்து போவதை பிரளயம் என்கிறோம். பிரளயத்திற்கு பிறகும் உயிர்கள் தோன்றி மறைகின்றன. ஒரு சிருஷ்டியும் சம்ஹாரமும் சேர்ந்து தான் ஒரு கர்ப்பகாலம். கர்ப்ப துவக்கத்தில், உயிர்கள் முளைவிடுகின்றன. கர்ப்பத்தின் முடிவில், உயிர்கள் அனைத்தும் கடவுளை அடைந்து கடவுளுக்குள் மறைந்து போகின்றன. மறுபடியும் தோன்றும் வேறொரு கர்ப்ப காலத்தில் உயிர்கள் மீண்டும் மீண்டும் படைக்கப்படுகின்றன. எனவே கடவுள் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று வேலைகளையும் இடைவெளி இன்றி தைலதாரை போல செய்து கொண்டே இருக்கிறார். இதை தான் கம்பர்

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுதலும் நீக்கிலும் நீங்கிலா
அலகிலா விளையாட்டுடையார்

என்று பாடுகிறார். படைக்கப்பட்ட பொருட்களுக்குள் கடவுள் எப்படியெல்லாம் ஊடுருவி நிற்கிறார் என்று எண்ணுவதே நமது சிந்தனைக்கு பெரும் விருந்தாக அமையும். கண்ணுக்கு தெரியாத வடிவத்தில், காணும் பொருள் ஒவ்வொன்றிலும் அவர் இருக்கிறார். ஒவ்வொரு பொருளின் தன்மையும் அவரே தான். அவர் தான் நீரில் குளிர்கிறார். நெருப்பில் சுடுகிறார். வேதத்தில் ஓம் ஹார பொருளாக இருக்கிறார். பாலில் சுவையாக, மழலையின் கள்ளமில்லா சிரிப்பாக, தாயின் அன்பாக, மனையாளியின் அரவணைப்பாக, தோழ மையின் நட் பாக அவரே இருக்கிறார். தவமும் அவர் தான், தவத்தின் வேகமும் அவர் தான் தவத்தின் பயனும்



அவர்தான்மனிதன் அற்பமான ஜீவன் பிரபஞ்ச வெளியை கணக்கிடும் போது ஒரு சிறிய புள்ளிகூட அவன் தேறமாட்டான். எப்போதும் வெற்றிமாலை அவன் கழுத்தை அலங்கரித்து கொண்டே இருக்காது. துன்பம் வரும். துயரம் வரும். சோகமும் துக்கமும் வந்து அவனை பந்தாடும். தன்னை காப்பதற்கு தன்னை மீட்பதற்கு கடவுள் வரமாட்டாரா? என்று ஏங்குகிறான். தவிக்கிறான். புரண்டு புரண்டு அழுகிறான். அந்த நிலையிலும் கடவுள் மனிதனுக்கு சில நிபந்தனைகளை தருகிறார். என்னை நம்பினால் மட்டும் போதாது. பூரணமாக என்னை தொழுதால் மட்டும் போதாது. முழுமையான அர்ப்பணிப்போடு என்னை சரணடை. சுய நலமற்ற சரணாகதியே உன்னை காக்க என்னை தூண்டும் என்கிறார்.

கலியுகத்தில் மனிதனாக வந்து, மனிதர்கள் மத்தியில் வாழ்ந்து நித்தியம் எது? அநித்தியம் எது? என்று எடுத்துக் காட்டிய கண்ணன் சொல்கிறான். என்னையே சிந்தித்து, என்னை உபாசித்து இடையறாத யோக முயற்சியில் ஈடுபடும் பக்தர்களின் சோம பாரத்தை நானே தாங்குகிறேன் என்று அமுத வாக்கு தருகிறான். மனிதரில் மாமனிதனாகிய வள்ளுவனும் இதே கருத்தை

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தாருக்கு
யாண்டும் இடும்பை இல

என்று இரத்தின சுருக்கமாக கூறுகிறார். கடவுளுக்கு நம் மீது வெறுப்பு கிடையாது. அதே நேரம் பெரிய விருப்பமும் கிடையாது. தண்ணீரிலேயே இருக்கும் தாமரை இலை, தண்ணீரில் ஒட்டாமல் இருப்பது போல சிருஷ்டி, பிரளயம் என்று படைப்பு தொழிலை ஓயாது செய்து கொண்டு இறைவன் இருந்தாலும், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு இருக்கிறான். காந்தம் இரும்பை மட்டும் தான் இழுத்து கொள்ளும் என்பதை போல சரணாகதி அடைந்தவரை மட்டும் இறைவன் எந்த நேரமும் கைவிடுவது இல்லை. கண்ணுக்கு இமை போல இருந்து, காவல் செய்கிறான். மகாபாரத்தை பாருங்கள். சூதாட்டத்தில் வைக்கப்பட்டு இழந்து போன பாஞ்சாலியை அவைக்கு இழுத்து வரும் போது கண்ணன் காப்பற்றவில்லை. எப்படி தனது கணவன்மார்கள் தன்னை மீட்டு விடுவார்கள் என்று அவள் நம்பினாள். அவைக்கு வந்த பிறகு பீஷ்மரை பார்த்து, துரோணரை பார்த்து, கிருபரை பார்த்து நீதி கேட்டு வாதாடினாள். அப்போதும் கண்ணன் வரவில்லை. எப்போது தன் கைகளை மேலே தூக்கி கோவிந்தா உன்னையே சரண டைகிறேன் என்று கூறினாளோ அப்போது தான் கண்ணன் வந்தான். அஸ்தினாபுரத்திற்கும்,


ஆன்மிகமலர் மெயில் புக்
16-30 நவம்பர் 2017 31
www.aanmeegamalar.com

துவாரகைக்கும் காததூரம் இருந்தாலும், புடவை கொடுக்கும் வேலை தடையில்லாமல் நடந்தது.

இப்படிப்பட்ட இறைவன் எப்படியெல்லாம் மனிதனுக்கு துணையாக வருகிறான் தெரியுமா? தாயாக வருகிறான்? தாயை விட சாலப்பரிவுடையவனாக வருகிறான். தந்தையாக வருகிறான். குழந்தையாக வருகிறான். தோழனாக வருகிறான். காதலனாக, காதலியாக, ஆசிரியனாக, பாடமாக, படிப்பினையாக வருகிறான். ஆட்சி செய்யும் அரசனாக, அடங்கி நடக்கும் சேவகனாக, குருவாக, சீடனாக இன்னும் சொல்லப்போனால் எத்தனை எத்தனை உறவாகவோ, உயிராகவோ இறைவன் வந்து கொண்டே இருக்கிறான்.

பால் இல்லாமல் குழந்தை அழுது புலம்பினால், கதறி அழுதால் பாலூட்டும் தாயாக திருஞான சம்மந்தருக்கு வந்திருக்கிறான். பதினாறு வயது காதலுக்கு தூது போகும் தோழனாக சுந்தரருக்கு வந்திருக்கிறான். பல் விழுந்து கூன் விழுந்த கிழவிக்காக, மண் சுமக்கும் கூலி ஆளாக வந்தான். பிரம்பால் அடிபட்டான், கண்ணப்பநாயனாரிடம் மிதிபட்டான். இப்படியெல்லாம் ஆயிரம் வடிவில் வந்து இன்றும் திக்கற்றவர்களுக்கு துணை செய்கிறான். அதை தான் கண்ணன் கீதையில் நான்காம் அத்தியாயத்தில் யார் யார் என்னை எந்த முறையில் நாடுகிறார்களோ அந்த வழியிலேயே அவர்களுக்கு அருள்வேன் என்கிறான்.

அழைத்த குரலுக்கு மட்டுமா ஆண்டவன் வருகிறான்? மனிதன் கேட்டதை எல்லாம் கூட அவன் தருகிறான். பணம் கேட்டால் பணம் தருகிறான். பதவி கேட்டால் தருகிறான். அறிவு கேட்டாலும் தருகிறான். ஞானம் கேட்டால் ஞானத்தையே தருகிறான். நாடிய பொருள் கைகூடும். ஞானமும், புகழும் உண்டாகுமென்று கவி சக்ரவர்த்தி கம்பன் பாடுகிறான். வழிப்பறி செய்து வானத்தையும், பூமியையும் இரண்டாக அளந்த வள்ளைக்கு ஆலயம் அமைக்க கொள்ளையடித்த மங்கை மன்னன் என்ற திருமங்கையாழ்வாரும்,

நலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பும் அருளும்
அருளோடு பெரும் நிலம் அளிக்கும்
வளம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்

என்று இறைவன் தருகிற பேர்களை எல்லாம் பட்டியல் போட்டு தருகிறார். அவைகளை பார்க்கும் போது நமக்கு மலைப்பாக இருக்கிறது. ஒரு பெரிய அங்காடிக்குள் நுழைந்து கொத்தமல்லி கட்டு, கருவேப்பிலை கட்டு முதல் கம்ப்யூட்டர் வரை வாங்கி வருவது போல, இறைவன் என்ற அருள் அங்காடி நமக்கு தராதது எதுவுமே இல்லை.

கடவுள் எவ்வளவு பொருளை தந்தாலும், பொருள் என்றாலே அநித்தியமானது. அழிந்து போக கூடியது. நிலைமாறும் தன்மையுடையது. அவற்றின் மூலம் சாஸ்வதமான நிம்மதியை அமைதியை பெற்றுவிட முடியாது. இனிப்பாக இருக்கும் சர்க்கரை மிட்டாய் அதிகமாக போனால் கசக்கும். பொருளாசை பொருளை அனுபவித்தல் என்பதுவும் இப்படிதான் ஒரு நிலைக்கு மேல் திகட்டிவிடும். எனவே இறைவன் தருகிற மிக உயர்ந்த பரிசு எதுவாக இருக்குமென்றால் என்றும் பிறப்பற்ற, எப்பொழுதும் மகிழ்ச்சியான எந்நேரமும் பரவசம் ததும்பும் முக்தி நிலை ஒன்றாகத்தான் இருக்கும் இதை கீதையில் கண்ணன் தன்னை சரணடைந்தவர்களுக்கு நிச்சயம் தருவதாக சத்தியம் செய்கிறான்.



கண்ணன் மேலும் சொல்கிறான். உயிர்கள் அனைத்திற்கும் நானே கதி. அவர்களை காப்பவனும், ஆள்பவனும் நானே. நானே அனைத்து ஜீவன்களுக்கும் சாட்சி. இருப்பிடம், அடைக்கலம், பிறப்பிடம், ஒடுங்குமிடம் நானே. நானே அனைத்திற்கும் வசிப்பிடம். நானே பிறப் பிடம். நானே சாக மருந்து. நானே மரணம். இப்படி சொல்கிற கண்ணன் உலகத்திலுள்ள ஒவ்வொரு துளியும் இறைவனின் வல்லமையால் வந்தது. இறைவனின் அருளால் இயங்குகிறது. இறைவனே எல்லாவற்றிற்கும் காரண கர்த்தாவாக இருக்கிறான்.




இறைவனே படைக்கிறான். இறைவனே காக்கிறான். இறைவனே அழிக்கிறான் என்கிறார்களே? இப்படி படைப்பு, காப்பு, அழிப்பு என்று மாறி மாறி செய்வதனால் இறைவனுக்கு என்ன லாபம்? துன்பத்தை தருபவனும் நானே துன்பத்தை போக்குபவனும் நானே என்பது என்ன நியாயம்? பிறப்பினால் சிரிப்பை தருகிறேன் என்கிறான். இறப்பினால் அழுகையை தருகிறேன் என்கிறான். இது எந்த வகை தர்மம். இதையெல்லாம் செய்யாமல் இறைவன் இருக்கலாமே என்று நமக்கு தோன்றும்.

அது கடவுளின் இரகசியம். கடவுளின் விருப்பம். கடவுளின் விளையாட்டு என்று பதிலை சொன்னாலும் அவையெல்லாம் கேள்விகளுக்கான பதிலாக தெரியவில்லை. மழுப்பல்களாக தெரிகிறது. எதை கேட்டாலும் தெள்ளத் தெளிவாக பதில் தரும் கீதை இது சம்மந்தமாக என்ன சொல்கிறது என்று பார்ப்போமா?

மூவுலகிலும் நான் எதையும் செய்ய கடமைப்பட்டவன் அல்ல. நான் அடைய வேண்டியதாக எஞ்சி நின்று அடைய தகுந்த பொருள் ஒன்றும் இல்லை. ஆனாலும் செயலில் ஈடுபட்டே வருகிறேன். என்று கீதை மூன்றாம் அத்தியாயம் இருபத்தி இரண்டாம் ஸ்லோகத்தில் கண்ணன் கூறுகிறான். இந்த பதில் விளங்க வில்லை. அல்லது விளங்க கூடிய தகுதியும், பக்குவமும் இன்னும் நமக்கு வரவில்லை. காதலின் ஆழத்தை அறியப்போன உப்பு பொம்மை கடலிலே கரைந்து விட்டது போல நமது கதை இருக்கிறது. சர்வ சக்தி வாய்ந்த இறைவன் இரகசியத்தை அறிந்து கொள்ள, மனிதனின் அறிவு இன்னும் வளரவில்லை. அல்லது அப்படியொரு மனிதன் இன்னும் பிறக்கவில்லை.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

## கடன் தீர்க்கும் எளிய வழிமுறைகள்

ஒன்னேகால் அடி வெள்ளை துணியை எடுத்து அதில் நான்கு பக்கங்களிலும் சிகப்பு ரோஜாவை வைத்து கட்டி, பின்பு நடுவிலும் ஒரு ரோஜாவை வைத்து அதை 3 நதிகள் சங்கமிக்கும் இடத்தில் விட, கடன்கள் அடியோடு அழியும்.

தொடர்ந்து வரும் பண பிரச்சனைகளுக்கு சிறிய மூடியுடன் கூடிய செம்பு கிண்ணம் அல்லது பாத்திரத்தில் பச்சை பாசிப்பருப்பை நிரப்பி ஓடும் நீரோடையில் விடவும். சுத்தமான நீரோடையாக இருக்க வேண்டும்.



## திசைக்கு ஏற்ற பலன் தரும் குத்து விளக்கு

1. குத்து விளக்கின் தீபம் கிழக்கு முகமாக ஏற்றினால் துன்பங்கள் நீங்கி வசீகரம் உண்டாகும்.
2. மேற்கு முகமாக ஏற்றினால் கிரக தோஷம் பங்காளி பகை உண்டாகும்.
3. வடக்கு முகமாக ஏற்றினால் கல்வி மற்றும் சுபகாரியங்களில் ஏற்படும் தடைகள் விலகும்.திரண்ட செல்வம் உண்டாகும்.
4. தெற்கு முகமாக ஏற்றினால் நல்ல தல்ல. அபசகுணங்கள் தென்படும். வீட்டுக்கு எம தூதர்களை விருந்தாளிகலாக்கும் அதனால் மரணங்கள் சம்பவிக்கும்.



பாகம் 6

# “ஆ(ம)ஹா பாரதம்”

உத்தங்கர் புறப்படும் நேரம் மன்னனின் விருப்பத் திற்க்கிணங்க விருந்தளிக்கப்பட்டது. சூடு ஆறியதும், தலைமுடியோடும் இருந்த உணவைக் கண்டதும் உத்தங்கர் மிகுந்த கோபத்தோடு மன்னரை குருடாகி விடும்படி சபித்து விட்டார்.

மன்னன் கோபத்தால் பதில் சாபமாய் நீர் வாரிசற்றவராவீர். என உத்தங்கரைப் பார்த்து கூறிவிட்டார்.

தூய்மையற்ற உணவை அளித்ததோடு சாபமும் இடுகிறீரே இது தர்மமா? இந்த உணவை நீரே கூர்ந்துப் பாரும் என்றதும் மன்னர் பார்த்து விட்டு காரணத்தை ஆராய்ந்தான்.

விரித்த முடியோடு ஒரு பெண் செய்தமையால் முடியும், சமைத்து நீண்ட நேரம் ஆன படியால் குளிர்ந்தும் இருந்தது என்பதையறிந்துப் பின் மன்னன் உத்தங்கரிடம் மன்னிப்பு கோரியதோடு அவரை மகிழ்ச்சிப் பெறச் செய்தான், மேலும் தனக்கு சாப விமோக்சனம் கேட்டான்.

உத்தங்கன் கூறியது பொய்யாகாது. ஆனால் சில நாட்களிலேயே மீண்டும் பார்வைப பெறுவீர்கள் என்று கூறிவிட்டு; இப்போது தங்களின் சாபத்தை திரும்ப பெறுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு மன்னன் என் கோபம் இன்னும் அமைதி அடையவில்லை. அதனால் சாபத்தைத் திரும்பப் பெறவும் திறனற்றவனாயிருக்கிறேன். பிராம்மணனின் இதயமானது வெண்ணெய்ப் போன்று எளிதில் உருகும் தன்மையுடையது. அவனது நாக்கானது கூரான கத்தியின் ஆளுமைக் கொண்டது.

இவை க்ஷத்திரியரிடம் இல்லை. அவர்களின் வாக்கு வேண்டுமானால் வெண்ணெய்ப் போன்று இருக்கலாம். ஆனால் இதயமானது கூரான முனையுள்ள கத்தியைப் போன்றது என்பதை நீரே அறிவீர். கடுமையான இதயமுடைய நான் சாபத்தைத் திரும்பப் பெற இயலாதவன். எனவே நீர் செல்லலாம் என்று கூறிவிட்டார்,

மன்னா! புனித மற்ற உணவை எனக்கு பரிமாறியதை அறியாமல் முன்பு சாபமிட்டு விட்டாய். பின் உண்மையறிந்து மன்னிப்பு கோரினாய். உண்மைத் தெரியாத போது நீ இட்ட சாபமானது என்னைக் கட்டுப்படுத்தாது. எனவே நான் சென்று என் செயலை செய்கிறேன் என்று கூறி சென்று விட்டார்.

கதை இங்கே இப்படியே தவமிருக்கட்டும்.

நாம் சற்றே இதன் அழகை கவனிப்போம்.

ஒரு குருவால் பூரணமாய் ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவன் சாதாரண ஒரு உணவிற்காக ஒரு மன்னரையே குருடாகப் போகும் படி சபிப்பது என்பது சரியா? எனும் கேள்வி எழும்.

இன்றுள்ள சூழ்நிலையில் நாம் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. வெந்ததும், வேகாததுமாய் ஏதோ ஒன்றை, ஏதோ ஓரிடத்தில் வயிறுப்புடைக்க சாப்பிட்டு விட்டு நம் வேலையை நாம் பார்க்கத் துவங்கி விடுகிறோம்.

இது இப்படியே சென்றுக் கொண்டிருக்கும் போது திடீரென ஒரு நாள் நமது உடல் ஏதோ ஒரு காரணமாய் சரியத் துவங்குகிறது. என்ன காரணம் என டாக்டரைப் பார்க்கச் சென்றால் ஆறிய உணவும், ஆரோக்கியமற்ற உணவும் தான் உங்கள் உடல் இந்த நிலையை அடையத் துவங்கியுள்ளது என்கிறார்.

உடனே விழித்துக் கொள்ளுகிறோம். ஒரு வாரம் உறுதிபாட்டோடு உணவு. மீண்டும் பழைய வழியில் பயணம், “நோய் தானாய் வருவது என்பது விதி. நாமாய் தேடிக் கொள்வது என்பது நமக்கு நாமே செய்துக் கொள்ளும் சதி”.

பூரணமாய் கற்றுணர்ந்த ஒரு பிராம்மணனுக்கு நன்றாகத் தெரியும் சாபமிடுவது என்பது தவறு என்று. இருந்தும் ஏன் சாபமிட்டான் எனில் மன்னனுக்கு சமமான வேதமோதும் அந்தணனுக்கே இந்த நிலையில் விருந்து எனில் நாட்டின் கடைநிலையில் இருப்பவனின் நிலை?

சிறந்த மன்னன், தர்மமான முறையில் அரசாட்சி என்பது மட்டும் போதுமா? நாட்டு மக்கள் ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டாமா? நாட்டு மக்களின் ஆரோக்கியத்தை கவனிக்காத மன்னன் கண்ணிருந்தும் குருடனே என்பதற்கே இந்த சாபம்.

அரசன் எவ்வளவு வல்லமையுள்ளவனாய இருந்தாலும் அவனிடம் பணிவு என்பது நிச்சயம் இருக்க வேண்டும். தன் மக்கள் ஒரு தவறு செய்து விட்டால் அதில் அவனுக்கும் ஒரு பங்கு உண்டு. அதன் அடிப்படையில் உணவு சமைத்தவர் செய்தது தவறு என்று தெரிந்ததும் அந்த தவறுக்காக உடனடியாக மன்னிப்பு வேண்டியது அவனது கம்பீரத்தை மேலும் விரித்துக் காட்டி விட்டது.

அற்ப விஷயத்திற்காக அரசனை சபிக்கும் எண்ணம் தமக்கில்லை என்பதாலும், அவன் அறிவிற்கு அதனை எட்டும்படி செய்ய வேண்டும் என்பது மட்டுமே தமக்கு நோக்கம் என்பதாலும் உத்தங்கர் சாபத்திற்கு விமோர்சனம் அளித்து விட்டார்.

FIR போட்டால் ஒரு பயம் வரும். இனி இப்படி செய்யக் கூடாது என்று மக்கள் கவனமாயிருப்பர். Case போடாமல் விட்டுவிடுவோம் என்று காவல் துறைக்கு அன்றே டெக்னிக் ஒன்றை சொல்லி கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

எல்லாம் OLD STATEMENT தான்.

அரசன் தன் மனநிலையை பூரணமாய் ஒப்புக் கொள்ளுகிறான். அந்தணன் என்றும் மென்மையை கையாளுவதால் மிக இயல்பாய் கோபத்தை விட்டு சாபத்திற்கு மாற்றுத் தெரிவித்து விட்டான். ஆனால் அரசன் வன்மையிலேயே அதிகம் உழல வேண்டியிருப்பதால் அவ்வளவு எளிதில் தனது கோபத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை என்று முழுமையாய் ஒப்புக் கொண்டு விட்டான்.

ஒரு அரசன் எப்படி இருக்க வேண்டும் என்பதை பத்து, பதினைந்து வரிக் கதையில் மிகச் சாதாரணமாய் பதித்து விட்டு செல்கிறான்.

என்ன ஒரு அருமையான வழித்தடங்கள். நாம் ஏன் இந்தப் பாதைகளை மறந்தோம்?

“கதை என்பது நேரம் போக்குவதற்காக



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

மட்டுமே. புராணம் என்பது புரிந்துக் கொள்ள தலைப்படுவது. ஆனால் மஹாபாரதம், இராமாயணம் போன்ற இதிஹாஸங்களோ நாம் இப் படித்தான் வாழ வேண்டும் என எடுத்துரைப்பது “

இவைகளை நாம் தவிர்த்துவிட் டோம். தரம் பிரித்து, தனியாய் நின்று, தான் ஆளும் வல்லமையைப் பெற எண்ணினோம். அதனால் தரங்கெட்டவர், குணம் கெட்டவர் எனும் பட்டம் மட்டுமே சுமக்கும் வாய்ப்பினை பெற்றவரானோம்.

அறியாத பொழுதில் பேசும் பேச்சு ஒருவரை சுடாது. அறிந்து பேசும் பேச்சே ஆறாத ரணத்தை உரு வாக்கும் என்பதால் அரசன் உண்மை அறியாது இட்ட சாபம் பலிக்காது என்றும் உண்மைத் தெரிந்து மன்னிப் பும் கேட்டு விட்டபடியால் அந்த சாபத்திற்கு வீரியமும் இருக்காது எனவே நான் போய் என் வேலையை கவனிக்கிறேன் என்று சொல்வதைப் பாருங்கள்.

சாதாரண இடம் போல் கதைப் போகிறது. ஆனால் எவ்வளவு ஆழ மான கருத்தை ஊன்றிப் போகிறது.

இது ஒரு அறிவுரை என்று எண்ணி விடாதீர்கள். அதே சமயம் அறிந்துக் கொள்ளாமல் அடுத்தடுத்தப் பக்கத் திற்கு சென்று விடாதீர்கள்.

கதைக்குள் ஆவலாய்ச் செல்கி றேன். உங்களையும் சற்றே ஆராயச் சொல்கிறேன்,

படிப்பவராய் இருப்பதால் தான் படித்து விட்டோம் என்கிறோம். தேடுபவராய் இருந்தால் இந்தப் பிறவியில் இந்த ஒரு புத்தகத்தையேப் பிடித்துக் கொண்டிருப்போம்.

“ரொம்ப நேரமாயிடுச்சு ஐயா
கொஞ்சம் நிறுத்துறீங்களா”
ன்னு நீங்க கேட்கும் முன்பே
அடுத்த இதழுக்கானப் பணியில்

அடுத்த இதழில்....

- Thali,
Ph:9600999279





# கண்ணனை காதலித்த மீரா



மீரா என்ற மீராபாய் (கி.பி 1498 கி.பி 1547) வட இந்திய வைணவ பக்தி உலகில் மறுக்கமுடியாத கிருஷ்ண பக்தை ஆவார். தென்னிந்திய ஆண்டாள் போல இவர் கிருஷ்ணர் மீது தீவிர பற்று கொண்டவர். 1300 பாடல்களுக்கு மேல் பாடிய மீரா ராஜபுத்திர இளவரசியாக தற்போதைய ராஜஸ்தானில் பிறந்தவர். பக்தி நெறியில் தீவிர பற்று கொண்ட இவர், கிருஷ்ணரின் மீது இயற்றிய பக்திப் பாடல்கள் மிகவும் புகழ்பெற்றவை.

## வாழ்க்கை

மீராபாய் ஜோத்பூர் அரசை நிர்மா ணித்த ராவ்ஜோதாவின் மகனான ராவ் தூதாவின் இளையமகனான ரத்தன் சிங், வீரகுமாரி தம்பதிகளின் மகளாக ஒரு வைணவக்குடும்பத்தில் பிறந்தார். தன்னு டைய ஏழாம் வயதில் தன் அன்னையை இழந்த மீரா பின்னர் தன் பாட்டனாரான ராவ்தூதால் வளர்க்கப்பட்டு கல்வியும் பயின்றார். அரச குடும்பத்தைச் சார்ந்த இவர் வைணவ சமய மரபில் வளர்க்கப்பட்டார். குழந் தைப் பருவம் முதலே “கிரிதர கோபாலன்” எனும் கிருஷ்ணர் சிலை மீது தொடங்கிய ஈடுபாடு நாளடைவில் ஆண்டாள் போல கண்ணனை தன் மணவாளனாக வரித்துக் கொண்டது. குடும்பத்தின் வற்புறுத்தலின் பேரில்1516ல் பதினெட்டு வயதில் சுய விருப்பமின்றி போஜராஜன் எனும் சித்தோர் கர் இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுக் கப்பட்டார்.

போஜராஜன் குடும்பத்தின் குலதெய்வ மான துளஜ பவானி எனும் துர்க்கை வழிப்பாட்டை மேற்கொள்ளாத மீராபாயின் கிருஷ்ண வழிபாட்டிற்கு எதிர்ப்பு கிளம் பியது. 1521 இல் தில்லி சுல்தானின் இசுலாமிய சாம்ராச்சியத்திற்கு எதிராக ராஜபுத்திரர்கள் ஒன்றுசேர்ந்து போர்புரிந்த போது இறந்த பலர் அரசர்களில் மீராவின் கணவர் போஜராஜனும் ஒருவர். மாமனார் அரவணைப்பில் அரண்மனையில் வாழ்ந்த மீரா, பின்னர் அவரையும் இழக்க கண்ணன் ஒருவனே துணையென சித்தோர்கர் அரண் மனையிலேயே வாழ்ந்து வரலானார்.

## கொலைமுயற்சி

ஆரம்பம் முதலே இவரின் கிருஷ்ண பக்திக்கு இருந்துவந்த எதிர்ப்பு, அடுத்து பதவிக்கு வந்த போஜராஜன் தம்பியான விக்ரமாதித்யாவால் உச்சத்தை அடைந்தது. அந்தரங்கமான இவரின் பக்தி நாளடைவில் அரண்மனைவிட்டு சாதுக்களின் கூட்டத் தோடும் சாமான்யர்களோடும் தன்னைமறந்து ஆடுவதும் பாடுவதுமான போக்கினால், அரசகுடும்ப மதிப்பிற்கு களங்கம் வருமென எண்ணி விக்ரமாதித்யா தன் தங்கையான உதாபாயோடு சேர்ந்து பலமுறை மீராவை கொலைசெய்ய முயற்சித்தான். அவற்றில் சில;

கண்ணனுக்கு நிவேதனம் (படைத்த) செய்த பிரசாதத்தில் நஞ்சைக் கலந்து, அதனை மீராவை அருந்துமாறு செய்தான். பின்னர் கண்ணன் அருளால் நஞ்சு நீக்கப் பட்டது.

மீராவின் படுக்கையில் இரும்பு முட்களை நிறைக்க, கண்ணன் அருளால் அவைகள் ரோசாமலர் இதழ்கள் ஆனது.

கொடிய பாம்பு அடைத்த பூக்கூடையை கொடுத்து கண்ணனுக்கு அர்ப்பணிக்குமாறு கொடுக்க, அலங்கரிப்பதற்கு மீரா அப்பூக் கூடையை திறந்த போது அது அழகிய பூமாலை ஆனது

## தேடல்

பின்னாட்களில் குரு ரவிதாசருக்கு சீடரான இவர், அரசக் குடும்பத்தின் தொல்லைகள்தாளாதுபலஇடங்களுக்கு சென்றும் நிறைவுப்பெறாது இறுதியில் கண்ணன் வாழ்ந்த பிருந்தாவனத்தை வந்தடைந்தார். அங்கு தன்னை கோபியர்களில் ஒருவராக உணர்ந்த அவர் வட இந்தியா முழுதும் யாத்திரையாக சென்று தம் கருத்துகளை பாடல்கள் மூலம் வட்டார மக்கள் மொழியான விரஜ மொழியில் பரப்பினார். பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியினின்று விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ணபக்தி அவசியம் என்றார். இவரது பக்திப் பாடல்கள் இனிமையானவை. பக்தி நெறியைச் சுவையான பாடல்கள் வாயிலாகப் பரப்பினர். எளிய பக்தியும், நம்பிக்கையுமே வீடு பேற்றினை அடைய நல்வழி என்றார். பிறப்பால் எவரும் உயர்ந்தவர் இல்லை. உயர்விற்கு காரணம் செயல் என்னும் கருத்தைப் பரப்பினார்.

## முக்தி

தன் இறுதிக் காலத்தில் குஜராத்தின் துவாரகைக்கு வந்தடைந்தார். அங்கு கோயில்கொண்ட துவாரகதீசன் (கண்ணன்) முன்பு பாடிக்கொண்டே அனைவரும் கண்ணெதிரிலேயே இறைவனோடு கலந்து மாயமானார்.



# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.